இரண்டாம் பகுதி

# விளையாட்டுப் பொம்மை

பிற்சேர்க்கை (ஆசிரியர் பனுவல்)

## விளையாட்டுப் படகு (3+)

செயல்பாட்டு அட்டைகளின் பரிமாற்ற உதவிக்கரம்

கேரள அரசு
**கல்வித் துறை**

தயார் செய்தது

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம் - 695 012
Phone: 0471-2341883, 2340323, e-mail: scertkerala@gmail.com

2020

*Prepared by:*
State Council of Educational Research & Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram -12, Kerala.
E-mail:scertkerala@gmail.com

*Type setting by:*
SCERT Computer Lab.

©
Government of Kerala
Education Department
2019

# ஆசிரியர்களிடம்

மழலையர்ப்பள்ளி கல்வி அரங்கு அறிவியல் பூர்வமாகவும் முழுமையானதாகவும் ஆக்குவதற்கு பல்வேறு செயல்பாடுகள் பொதுக்கல்வி பாதுகாப்பு பணியின் பகுதியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எஸ்.ஸி.இ.ஆர்.டி (SCERT) - ன் தலைமையில் கேரள மழலையர்ப்பள்ளிக்கல்விக்கு வழிகாட்டுவதற்காக மழலையர்ப்பள்ளிப் பாடத்திட்டமும் ஆசிரியர் பனுவலான "விளையாட்டுப் பொம்மையும்" காலத்திற்கேற்ப தயார் செய்யப்பட்டுள்ளது. நான்கு வயது நிறைவடையும் போது ஐந்து வளர்ச்சி மண்டலங்களிலாக 87 திறன்களைக் குழந்தை பெற்றிருக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் மழலையர்ப்பள்ளி செயல்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. குழந்தைக்குப் பழக்கமான சுற்றுச் சூழலுடன் தொடர்புடைய 30 மையக்கருத்துகள் வாயிலாகத்தான் ஆசிரியை செயல்பாடுகளைத் திட்டமிட வேண்டும்.

மழலையர்ப்பள்ளியில் பணிபுரிவோருக்கு மேம்பட்ட உட்பார்வையும் பரிமாற்றத் திறனும் கிடைக்கும் வண்ணம் பின்னூட்ட அமைப்புகளை ஒழுங்கு செய்ய வேண்டியுள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்டதுதான் "விளையாட்டுப் பொம்மை" என்ற ஆசிரியர் பனுவல். மேலும் கேரளத்திலுள்ள அனைத்து அரசு மற்றும் அங்கீகரிக்கப்பெற்ற மழலையர்ப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு "முன்பயிற்சி" என்ற பெயரில் பயிற்சி வழங்கப்பட்டது. பெற்றோர்களுக்கும் தனி விழிப்புணர்வு வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டன. முன்வாசிப்பு, முன் எழுத்து, முன் கணிதம், நுண்ணிய தசை வளர்ச்சி, படைப்பாற்றல் வளர்ச்சி ஆகியவற்றிற்கு உதவுகின்ற செயல் அட்டைகள், குழந்தைகளுக்காக 'விளையாட்டுப் படகு" என்னும் பெயரில் மூன்று பகுதிகளாக தயார் செய்யப்பட்டுள்ளது. விளையாட்டுப் படகின் இரண்டாம் பகுதியில் 11 முதல் 20 வரையுள்ள மையக்கருத்துகள் குழந்தைகளின் வளர்ச்சி மண்டலங்கள், திறன்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. குழந்தையின் வயது, இயல்பு, திறன்கள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்து எவ்வாறு பரிமாற்றம் செய்யலாம் என்பதற்கான தெளிவான வரையறைகளை இந்தக் கையேடு அளிக்கிறது. சுயமாகச் செயல்பாடுகளை உருவாக்குவதற்கும் செயல்பாடு அட்டைகளை மேம்படுத்துவதற்கும் ஆசிரியைக்கு சுதந்திரம் உண்டு. இந்தக் கையேட்டைச் சிறந்த முறையில் பயன்படுத்துவீர்களல்லவா.

வாழ்த்துகளுடன்,

**முனைவர். ஜெ. பிரசாத்**

இயக்குநர்

## படைப்புப் பட்டறையில் செயல்பட்டவர்கள்

1. **அப்துனாசர் யு.கெ**
   விரிவுரையாளர், டயற்று, கோழிக்கோடு
2. **மகேஷ் குமார். எம்**
   ஆசிரியர், எல்.பி.எஸ் செறியாக்கரை, காசர்கோடு
3. **சுரேஷ் பாபு. கெ.கெ.**
   பயிற்சியாளர் (ஓய்வு), எஸ்.எஸ்.எ கண்ணூர்
4. **சைஜ எஸ்.**
   ஆசிரியை, அரசு எல்.பி.எஸ், கோயிப்பாடு, கொல்லம்.
5. **ஷினோஜ் ராஜ்**
   துணை பதிப்பாசிரியர், யுரீக்கா, சாலப்புறம், கோழிக்கோடு.
6. **அனில் குமார். பி.**
   ஜி.எஃப், எல்.பி.எஸ், கும்பள, கோழிக்கோடு
7. **அனிதா குமாரி கெ.பி**
   ஆசிரியை (ஓய்வு), ஏ.சி.கெ.என்.ஜி.யு.பி.எஸ், மேலாங்கோடு, காசர்கோடு.
8. **ஸஜிதா. பி**
   மழலையர்ப்பள்ளி, ஆசிரியை, ஜி.டப்ளியு, எல்.பி.எஸ் அயணிக்காடு, கோழிக்கோடு.
9. **சித்திரஷாலினி. என்.கெ**
   மழலையர்ப்பள்ளி ஆசிரியை, ஜி.ஹச்.எஸ்.எஸ். ராவணேஷ்வர், காசர்கோடு.
10. **ரஸீனா வி.பி**
    மழலையர்ப்பள்ளி ஆசிரியை, அரசு. யு.பி.எஸ், புழதி, கண்ணூர்.
11. **ரஞ்சித் கெ.பி.**
    ஹெச், எஸ்.எஸ்.டி, ஜி.ஹெச்.எஸ்.எஸ், அடூர், காசர்கோடு
12. **ஸுஜயா**
    மிக்ஸட் யு.பி. எஸ். தளாப்பு, கண்ணூர்

## நிபுணர்கள்

1. **முனைவர். ஸி. ராமகிருஷ்ணன்**
   மாநில பாட ஏற்பாடு உயர்மட்டக் குழு உறுப்பினர்.
2. **முனைவர். ஆர். ஜெயபிரகாஷ்**
   உதவிப் பேராசிரியர், குழந்தை நல மருத்துவர், எஸ்.எ.டி மருத்துவமனை, திருவனந்தபுரம்.
3. **முனைவர். டி.பி கலாதரன்**
   ஆலோசகர், எஸ்.எஸ்.கே கேரளம்.
4. **முனைவர். ஆர் பிரசன்ன குமார்.**
   டயற்று முதல்வர் (ஓய்வு).
5. **முனைவர். பி.வி புருஷோத்தமன்**
   விரிவுரையாளர் (ஓய்வு), டயற்று.

## தமிழாக்கம்

1. **ஆர். ரசல் ராஜ்**
   தலைமை ஆசிரியர், எ.எல்.பி.எஸ்
   அருவிக்காடு, மூணார், இடுக்கி, கேரளம்.
2. **ஜூலியட். எல்.**
   எல்.பி.எஸ்.எ தமிழ், அரசு, எஸ்.எஸ்.எல்.பி.எஸ்
   கரமனை திருவனந்தபுரம்.

## நிபுணர்கள்

1. **முனைவர். சாந்தி. பி**
   உதவிப் பேராசிரியர்
   அரசு. மகளிர் கல்லூரி, திருவனந்தபுரம்
2. **முனைவர். பெனடி. கெ**
   உதவிப் பேராசிரியர்
   அரசு கலைக் கல்லூரி, திருவனந்தபுரம்

**கல்விசார் ஒருங்கிணைப்பாளர்**
**திருமதி. ஷைலா ஜாஸ்மின். எல்.எஸ்**
(மழலையர்ப்பள்ளி கல்வி அமைப்பு)
ஆராய்ச்சி அதிகாரி எஸ்.ஸி.இ.ஆர்.டி

## விளையாட்டுப் படகு
## பயிற்சித்தாள் பயன்படுத்தும் போது

மையக்கருத்தின் கருத்துப் பரிமாற்றத்தின் முதற் படியாகவோ, குழந்தையின் சிந்தனைத் திறன், படைப்பாற்றல் போன்றவற்றை ஊக்குவிப்பதாகவோ மையக் கருத்து பரிமாற்றத்திற்குப் பின் குழந்தையின் கருத்து வெளியீடு நடத்துவதற்காகவோ பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம். பல்வேறு மையக்கருத்துகளோடு தொடர்பு படுத்தி குறிப்பிட்ட திறன்களின் வளர்ச்சிக்காகக் கொடுக்கப்படும் அனுபவச் செயல்பாடுகளின் தொடர்ச்சியாகவோ, முழுமைப்படுத்துதலாகவோ, மதிப்பிடுவதற்காகவோ இப்பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம். சில வாய்ப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

- **மையக்கருத்துச் செயல்பாடுகள் → பயிற்சித்தாள் → மையக்கருத்துச் செயல்பாடுகள்.**

மையக்கருத்துடன் தொடர்புடைய அனுபவங்களை அளித்தும் தொடர்ச்சியாகவும் இயல்பாகவும் பயிற்சித்தாள் அளித்தும் தொடர்ந்து செயல்பாடுகளைத் திட்டமிடலாம்.

- **பயிற்சித்தாள் + மையக்கருத்துச் செயல்பாடுகள் → மையக்கருத்துச் செயல்பாடுகள் → பயிற்சித்தாள் → மையக்கருத்துச் செயல்பாடுகள்.**

பயிற்சித்தாளைச் செயல்பாடகவே அளிக்கலாம். அத்துடன் இயல்பாகவே சங்கிலித் தொடராக பிற செயல்பாடுகளைக் கொடுக்கலாம்.

- ஒரு அனுபவக் கருவியாக பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம்.
- குழந்தைகளின் பயிற்சித்தாளை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தி

அலசி ஆராயவும் வளர்ச்சியை வேறுபடுத்தி அறிவதற்கும் உதவும் வகையில் பயிற்சித்தாளைப் பயன்படுத்தலாம். ஒரு குழந்தையின் தொடர்ச்சியான மாற்றத்தைத்தான் மதிப்பிட வேண்டும்.

- குழந்தை ஈடுபடும் செயல்பாடுகளின் செயல்வரிசையை ஆசிரியை உற்று நோக்கிக் கொண்டிருக்க வேண்டும்.
- குழந்தைகளின் பயிற்சித்தாளை ஒப்புமைப்படுத்தக் கூடாது.
- ஒவ்வொரு குழந்தையினுடையவும் வளர்ச்சி மண்டலங்களின் வேகம் வேறுபட்டதாகும். ஆதலால் குழந்தைகளின் வெளியீடுகளை ஒப்புமைப்படுத்தக் கூடாது.
- அளிக்கப்பட்டுள்ள பயிற்சித்தாள்களின் தொடர்ச்சியாகவோ அதன் பிற்சேர்க்கையாகவோ புதிய பயிற்சித்தாளை வடிவமைப்பதற்கான சுதந்திரம் ஆசிரியைக்கு உண்டு.
- குழந்தை பயிற்சித்தாளைப் பூர்த்தி செய்தபின் அதைப் பாதுகாத்தல், மீள்பயன்பாடு போன்றவை குறித்த சரியான அறிவு ஆசிரியைக்கு இருக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட பயிற்சித்தாள்களைப் படைப்புத் தொகுப்பில் பாதுகாக்க வேண்டும்.
- பயிற்சித்தாளை முறைப்படியான கற்றல் முறையில் அணுகக் கூடாது.

## பயிற்சித்தாள்கள் - செயல்பாடுகள்

**பல்வேறு வளர்ச்சி மண்டலங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பயிற்சித்தாள்கள் இங்கு தரப்பட்டுள்ளன. கீழே விரிவாகவும் கூறப்பட்டுள்ளது.**

### 1. உடல் இயக்க வளர்ச்சி

நுண் தசை வளர்ச்சிக்குத் தேவையான வாய்ப்புகள் எல்லா பயிற்சித் தாள்களிலும் அளிக்கப்பட்டுள்ளன. படம் வரைதல், வண்ணம் தீட்டுதல், உருவாக்குதல் போன்றவை இந்த வளர்ச்சி மண்டலத்திற்கு முக்கியத்துவம் அளிப்பவை. வரைந்து இணைத்தல் வட்டமிடுதல், முன் வரைதல் போன்ற செயல்பாடுகளால் நுண்தசைப் பயிற்சி கிடைக்கிறது. கிழித்தல், வெட்டுதல், ஒட்டுதல், போன்ற அனுபவங்கள் வாயிலாக நுண் தசைகளின் வளர்ச்சி உருவாகிறது.

3+ பருவத்திலுள்ள குழந்தைகளுக்கு நுண் தசைகளின் இயக்கம் குறைவாக இருக்கும். எனவே அவர்களால் செய்ய இயல்கின்ற சிறு சிறு செயல்பாடுகள் தான், விளையாட்டுப் படகில் குறிப்பிடப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல் பெருந்தசை வளர்ச்சிக்காக ஓடுதல், குதித்தல், படிகள் ஏறி இறங்குதல், ஊர்தல், தவழுதல் போன்ற எராளம் அனுபவச் செயல்பாடுகளை வகுப்பறையில் திட்டமிட வேண்டும்.

4+ குழந்தைகளுக்கு இன்னும் அதிகமான நுண் கவனம் தேவையுள்ள செயல்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக கத்தரிக்கோல் பயன்படுத்தி துல்லியமாக வெட்டுவதற்கான பயிற்சி. இதற்காக குழந்தை பாதுகாப்பு (child safe) கத்தரிக்கோலைப் பயன்படுத்துவது நன்று. புள்ளிகளை இணைத்து வரைந்து படத்தை முழுமைப்படுத்துதல் தனிப்பட்ட செயல்பாடாகும். ஒன்றாம் வகுப்பில் குழந்தை எழுத்துகளையும் சொற்களையும் வாக்கியங்களையும் எல்லாம் எழுத வேண்டும். அதனால் 4+ ல் வைத்து முன் எழுத்துச் செயல்பாடுகள் ஏராளம் அளித்தல் வேண்டும்.

### 2. மொழி வளர்ச்சி

மழலையர்ப் பள்ளி காலகட்டத்தில் உரையாடலுக்கு மிக முக்கிய பங்குண்டு. கூச்சமும் பயமும் இல்லாமல், தயக்கமின்றி பேசுவதற்காக குழந்தைகளைத் திறமையானவர்களாக்க நாம் முயற்சிக்க வேண்டும். அனைத்து பயிற்சித்தாள்களிலும் இதற்கான வாய்ப்பு உள்ளன.

படம் வாசித்தல், இயற்கை நடத்தல், பொம்மை விளையாட்டு, பாத்திர நடிப்பு, விளையாட்டு, பிற அனுபவச் செயல்பாடுகள் போன்றவற்றில் ஒவ்வொரு குழந்தைக்கும் பேசுவதற்கான வாய்ப்பு அளிக்க வேண்டும். படங்களில் உள்ள நிகழ்வுகளைச் சொல்லுதல், வரைந்ததும் வண்ணம் தீட்டியதுமான படங்களைப் பற்றிக் கூறுதல், பிறர் வரைந்த படங்களின் கருத்துகளைக் கூறுதல், செய்த காரியங்களின் யுக்தியும் காரிய காரணங்களையும் கூறுதல் போன்ற உரையாடலுக்கான பன்முக வாய்ப்புகள் பயிற்சித்தாள் செயல்பாடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

3+ பருவத்தில் தனது வீட்டில் பேசும் மொழி வாயிலாகத்தான் குழந்தைகள் கருத்துப் பரிமாற்றம் நடத்துவார்கள், இச்சூழலில் கேலிசெய்தல், தடை செய்தல், புறக்கணித்தல் போன்றச் செயல்களை ஆசிரியை செய்தல் கூடாது. அது குழந்தையின் தன்னம்பிக்கையைச் சிதைத்து விடும். பேசுவதற்கான ஊக்குவித்தலை அளித்தல் அவசியம்.

4+ பருவத்திற்கு வரும்போது வழக்கு மொழியின்றி இலக்கிய மொழி வளர்ச்சி அடைவதற்கான மாதிரிகைகளும் அனுபவங்களும் அளித்தல் வேண்டும். இதுபோன்ற வாய்ப்புகளை பயிற்சித்தாளில் வழங்கும் போது கவனத்துடன் பயன்படுத்த நம்மால் இயல வேண்டும். இந்த நிலையில் முன்எழுத்துச் செயல்பாடுகள் வழங்கும் முறையில் விளையாட்டுப் படகில் உள்ள பயிற்சித்தாள்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

## 3. அறிவுசார் வளர்ச்சி

அறிவியல், கணித மண்டலத்திலுள்ள அனுபவச் செயல்பாடுகள் இம்மண்டலத்தில் உட்படுத்தப்பட்டுள்ளன. பெரிது/சிறிது, கூடுதல்/குறைவு, அண்மையில்/தூரத்தில், நீளம் கூடியது/குறைந்தது, உயரம் கூடியது/ குறைந்தது போன்ற முன் – கணிதக் கருத்துகள், பொருட்கள், எண்ணுதல், இணைத்தல் போன்றவை உட்படுத்தப் பட்டுள்ளன. வகுப்பறையில் ஏராளம் நேர்முக அனுபவங்களை அளித்த பிறகு தான் பயிற்சித்தாளைப் பயன்படுத்தவேண்டும்.

உற்று நோக்குதல், ஒப்புமைப்படுத்துதல், ஒற்றுமை வேற்றுமைகள் கண்டறிதல், வகைப்படுத்துதல், கண்டுபிடித்த உண்மைகளை வெளியிடுதல் போன்ற செயல் வரிசைத் திறன்களுடன் தொடர்புடைய ஏராளம் செயல்பாடுகள் விளையாட்டுப் படகில் உட்படுத்தப்பட்டுள்ளன.

படங்களை உற்றுநோக்குதல் மட்டுமே பயிற்சித்தாள் வாயிலாகக் கிடைக்கிறது. அதனால் கண்டறிதல், கேட்டறிதல், முகர்ந்து அறிதல், சுவைத்தறிதல், தொட்டு அறிதல் ஆகிய ஐம்புலன்கள் வாயிலான கற்றல் அனுபவங்கள் கிடைக்கும் வகையிலும் திட்டமிட வேண்டும். யுக்திச் சிந்தனை, காரண காரியத் தொடர்புகளைக் கண்டறிந்து கூறுதல், அடுக்குகள் வடிவமைத்தல், பல வகையான உருவாக்கச் செயல்களில் ஈடுபடுதல், நினைவுப்படுத்திக் கூறுதல் போன்ற அனுபவங்கள் குழந்தைக்குக் கிடைக்க வேண்டும்.

மூன்று வயதினருக்கு இலகுவான முன் கணிதக் கருத்துகள், நிறங்களைப் பிரித்தறிதல், வேறுபாடு அறிதல், படங்களை உற்று நோக்கி அதிலுள்ள நிகழ்வுகளைக் கூறுதல், ஒரே போலுள்ளவைகளைக் கண்டறிதல், குழுவில் சேராதது கண்டுபிடித்தல், அதன் காரணம் கூறுதல் போன்ற செயல்பாடுகள் தான் தரப்பட்டுள்ளன.

நான்கு வயதினருக்கு இவைகளைவிட உயர்தரச் செயல்பாடுகளுடன் 1 முதல் 5 வரையுள்ள எண்ணறிவோடு தொடர்புடைய செயல்பாடுகளும் உட்படுத்தப்பட்டுள்ளன. மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக்குகாகத் தரப்பட்டுள்ள செயல்பாடுகளைத்தழுவி பயிற்சித்தாள்களைப் பயன்படுத்தலாம்.

## 4 படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

படம் வரைதல், வண்ணம் தீட்டுதல், உருவாக்கல் போன்ற முக்கியமான செயல்பாடுகள் இம்மண்டலத்தோடு தொடர்பு படுத்தி விளையாட்டுப் படகில் உட்படுத்தப்பட்டுள்ளன. மொழி வாயிலான படைப்பாற்றலுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

படம் வரைதல் (சுதந்திரமாகவும், கட்டுப்பாட்டுடனும்), வண்ணம் தீட்டுதல் போன்றவை மேலே கூறப்பட்டுள்ளதல்லவா, பல வகையான உருவாக்கல் வாய்ப்புகளை உட்படுத்துவதற்கு முயற்சி செய்யப்பட்டுள்ளன. மணல் படங்கள், விரல் படங்கள், இலை மிருகக் காட்சி சாலை வடிவமைத்தல், பூக்கள் உருவாக்குதல், அடையாள அட்டை தயாரித்தல், கொடி வடிவமைத்தல், தோரணங்கள் தயாரித்தல் போன்று, கைவிரல் பதித்து படம் உருவாக்கல், இலை அச்சு, பஞ்சு, பென்சில் சீவியதுகள் போன்றவற்றை ஒட்டி, படங்களை முழுமைப் படுத்தல் போன்ற பல்வேறுபட்ட உருவாக்குதல் வாய்ப்புகள் விளையாட்டுப் படகில் உள்ளன.

3+ பருவத்தினருக்குத் தகுந்த எளிமையான உருவாக்கல் செயல்பாடுகள் தரப்பட்டுள்ளன. இச்செயல்பாடுகளை வழங்கும் போது படைப்பு மற்றும் அழகியல் மேம்பாட்டுடன் நுண் – பெருந்தசைகளின் பயிற்சிக்கான வாய்ப்புகளும் உண்டல்லவா. மேலும் சமூக – உள வளர்ச்சிக்கும் இவை பயன்படுகின்றன. ஒற்றுமை மனப்பாங்கும், தலைமை தாங்கும் திறன்களும் அடையும் படியான குழுச் செயல்பாடுகளைத் திட்டமிட வேண்டும்.

4+ பருவத்திலுள்ள குழந்தைகளுக்கு சிறிது உயர் தரத்திலான பயிற்சித்தாள் உட்படுத்தப்பட்டுள்ளது. கத்தரிக்கோல் பயன்படுத்தி

வெட்டவும் ஒட்டவும், காகிதம் பயன்படுத்தி பூக்கள், ஓரிகாமி வடிவங்கள் போன்றவை உருவாக்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இயற்கையில் இருந்து கிடைக்கும் பொருட்கள், உபயோகமற்ற பொருட்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி உருவாக்கச் செயல்பாடுகளைச் செய்ய வைக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே குழந்தையின் படைப்பாற்றல் வளர்ச்சி மேம்படும்.

### 5. சமூக உள வளர்ச்சி

'விளையாட்டுப்படகிலுள்ள செயல்பாடுகள்' அனைத்துமே தனிநபர் செயல்பாடாகும். ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்கான வாய்ப்புகளையும் உருவாக்க இயலும். வண்ணம் தீட்டுவதற்கான கிரையான்களைக் கொடுத்தும் உருவாக்கச் செயல்பாடுகளில் குழுக்களாகவும் சேர்ந்து ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் உருவாகுமல்லவா. சில செயல்பாடுகளில் குறிப்பிட்ட நிறமுள்ள கிரையான் தேவைப்படும். எடு: இலைகளுக்குப் பச்சைநிறம் அளித்தல். ஒருவர் வண்ணம் தீட்டி முடியும் வரை காத்து நிற்க குழந்தையை ஊக்குவிக்க ஆசிரியையால் இயலும். கத்தரிக்கோல் பயன்படுத்தி வெட்டும் சூழலிலும் இவ்வாறு காத்து நிற்க வேண்டியது வரும்.

கதைகளில் வரும் மனவெழுச்சிகளைத் தனது மனவெழுச்சிகளுடன் தொடர்பு படுத்துதல் வாயிலாக சமூக உள வளர்ச்சியை உருவாக்க இயலும். பயிற்சித்தாள் வழங்கும் போது கதைக் களம், நிகழ்வு, வகுப்பில் கூறும் கதைகள், பாடல்கள், கதைப் பாடல்கள், பொம்மை நாடகம், பாத்திர நடிப்பு போன்றவை சமூக உள வளர்ச்சிக்காகவும் பயன்படுத்தும்போது தான் ஆசிரியை வெற்றி அடைகிறார்.

## மதிப்பீடு

ஒவ்வொரு வளர்ச்சி மண்டலத்திலும் ஒவ்வொரு குழந்தையும் எந்நிலையில் நிற்கிறார்கள் என்பதை ஆசிரியையால் கண்டறிய இயல வேண்டும். குழந்தையின் தனிநபர் திறன்களை உணர்ந்து தேவையான ஊக்குவித்தல் அளிக்க இது ஆசிரியருக்கு உதவும். மேலும் தனது திட்டமிடலில் உள்ள குறைகளை உணர்ந்து மேன்மைப்படுத்தவும் மதிப்பிடல் வாயிலாக இயலும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்கு அளிக்கவேண்டிய உதவிகள் என்னென்ன என்பதைக் குறிப்பிட்டுக் கூறவும் ஆசிரியைக்கு உதவுவது தொடர் மதிப்பீடு வாயிலாகப் பெறும் குறிப்புகள் தான்.

ஒவ்வொரு பயிற்சித்தாள்களிலும் என்னென்ன மதிப்பிட வேண்டும் என்று பனுவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. செயல்பாடுகள் நடக்கும் போது ஆசிரியர் செய்யும் உற்று நோக்கலும் பயிற்சித்தாள் என்ற படைப்பை மதிப்பிடுதல் வாயிலாகவும் தான் தொடர்மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது. பெற்றோருடன் உள்ள கலந்துரையாடல் வாயிலாகவும் சில முக்கியமான உற்றுநோக்கல் குறிப்புகள் நமக்குக் கிடைக்கும்.

ஒவ்வொரு பயிற்சித்தாளும் செய்து காட்சிப்படுத்திய பின் குழந்தையின் படைப்புத் தொகுப்புப் பையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதை அலசி ஆராயும் போது குழந்தையின் வளர்ச்சி மண்டலத்தில் ஏற்பட்ட சீரான வளர்ச்சி ஆசிரியைக்கும் பெற்றோருக்கும் புரிந்து கொள்ள முடியும். ஆண்டிறுதியில் இவைகளை ஒருங்கிணைத்து குழந்தையைக் குறித்துள்ள சரியான மதிப்பிடுதல் தயாராக்க முடியாதா?

குழந்தைக்கும் பெற்றோருக்கும் தேவையான பின்னூட்டம் நடத்தி மேன்மைப் படுத்த இதன் வாயிலாக ஆசிரியைக்கு இயலும்.

# மையக் கருத்து 11 காய்கறிகள்

கவனியுங்கள், சிறு வயதிலேயே குழந்தைகள் என்னென்ன அனுபவங்கள் வாயிலாக கடந்து செல்கின்றனர்! "காய்கறிகள்" என்ற மையக் கருத்தையே எடுத்துக் கொள்வோம். தாவரங்கள், பழங்கள், பூக்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய எத்தனை எத்தனை அனுபவங்கள் அவர்களுக்கு இருக்கலாம், அல்லவா!

ஒன்று சொல்லட்டுமா, காய்கறிகளின் வேற்றுமைகளைப் பாருங்கள். பல நிறங்கள் என்னென்ன வடிவங்கள்! அளவு வேறுபாடுகள்! இவை அனைத்தும் குழந்தைகளிடம் வியப்பை ஏற்படுத்துவதுண்டு.

மொழி வளர்ச்சி, படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டல்லவா செயல்பாடுகள் ஒழுங்கு செய்யப்படுகிறது. அப்போது மையக் கருத்தையும் மனதில் கொள்ள வேண்டும். அங்குதான் குழந்தை உள்ளங்களில் காய்கறி பயன்படுத்துவதன் தேவையைப் புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

'விளையாட்டுப் பொம்மையில்' உள்ள மையக் கருத்து திட்டமிடல் ஆறாவது பாடத்தில் "காய்கறிகள்" என்ற மையக் கருத்தை Tryout - ன் பகுதியாகச் செய்ததின் குறிப்புகள் உள்ளன. நீங்கள் செயல்பாடுகளைத் திட்டமிடும் போது அவற்றையும் கருத்தில் கொள்ளலாம்.

பொம்மலாட்டத்தின் வாய்ப்பு, மணல் தட்டு ஒழுங்கு செய்தல் ஆகியவற்றின் குறிப்புகளையும் பயன்படுத்தலாம்.

## செயல்பாட்டு வரிசை

1. பழம், காய்கறி விளையாட்டு
↓
2. வகுப்பில் ஒரு காய்கறி தோட்டம் (பாவை நடிப்பு)
↓
3. போலச் செய்தல் விளையாட்டு
↓
4. பயிற்சித்தாள் 11.1 – வட்டத்திற்குள்ளாக்குதல் – கொடுத்தல்
↓
5. காய்கறி படங்கள் ஒட்டுதல்
↓
6. பயிற்சித்தாள் 11.2 – "எண்ணிக்கை எத்தனை கூறலாமா?" கொடுத்தல்
↓
7. களிமண், மைதா மாவு ஆகியன பயன்படுத்தி காய்கறி வடிவங்கள் உருவாக்குதல்.
↓
8. செய்கைப் பாடல் பாடுதல்
↓
9. பாத்திர நடிப்பு (Role play).
↓
10. சலாடு (Salad) உருவாக்குதல், கலவை வழங்குதல்

## பயிற்சித்தாள் – 11.1 வட்டத்திற்குள்ளாக்குதல்

**வளர்ச்சி மண்டலங்கள்**
- படைப்பாற்றல் வளர்ச்சி
- அறிவுசார் வளர்ச்சி

**திறன்கள்**
1. அனுபவங்கள், சூழல்கள் ஆகியவற்றிலுள்ள கதாபாத்திரங்களின் பகுதிகளை நடிக்க இயலுகிறது. (Role play) பாத்திர நடிப்பு (75)

2. பொருட்கள்/படங்களை உற்றுநோக்கி குழுவில் சேராததை வேறுபடுத்திக் கண்டறிந்து கூறவும் குழுவில் சேராததின் காரணத்தைக் கூறவும் இயல்கிறது (33).

**கருத்துகள்**

1. பலவகை காய்கறிகள் உள்ளன.
2. அளவிலும் நிறத்திலும் அவை வேறுபட்டவையாகும்.
3. வேக வைத்தும் அல்லாமலும் காய்கறிகளை உண்பதுண்டு.

**கருவிகள்** : பயிற்சித்தாள், கிரையான்ஸ்

**சூழல்** : வகுப்பில் ஒரு காய்கறித்தோட்டம், போலச் செய்தல், விளையாட்டு ஆகிய செயல் பாடுகளுக்குப் பின்.

**செயல்முறை**

- கதைக்கூற்று

வயிறையும் தடவி, பனிக்கூழ் (ஐஸ்கிரீம்) சாப்பிட்டு, காட்சிகளைப் பார்த்துக் கொண்டே பூசணிக்காய் நாட்டைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டது. ஹோ.... ஹோ.. என்னே இன்பம்! நல்ல காற்று! 'சிறிது தூரம் கூட சும்மா நடக்கலாம்' பூசணிக்காய் நினைத்தது.

அப்பொழுது அதோ பாத்தியில் காய்த்து நிற்கும் கத்திரிக்காய் பிஞ்சுகள்.

''பூசணி எங்கே போகிறாய்?'' அவர்கள் கேட்டனர். ''எங்கும் போகவில்லை உங்களையெல்லாம் பார்க்கத்தான் வந்தேன்." பூசணி கூறியது. வேலியருகில் நின்றிருந்த வெண்டை கேட்டது "என்னையும் உன்னோடு சேர்த்துக் கொள்வாயா?"

"இல்லை.... இப்போது நான் வேலையாயிருக்கிறேன். வேறு ஒரு நாள் பார்க்கலாம்." பூசணி திரும்பிப் பார்க்காமல் நடந்தது.

மலையின் அடிப்பகுதியிலுள்ள வயலிலிருந்து 'வெள்ளரிக் குழந்தைகள்' பூசணியுடன் செல்ல அழுது அடம்பிடித்தன. அப்போது பூசணி கண்ணை உருட்டி அவர்களை பயமுறுத்தி நிறுத்தியது.

மீண்டும் பூசணி நடந்து நடந்து சென்றது. சிவப்பு நிறத் தக்காளியும், நீண்ட பச்சைமிளகும் கூட வரட்டுமா எனக் கேட்டன, எனினும் பூசணி ஒன்றும் கூறவில்லை. எந்தெந்த காய்கறி நண்பர்கள் பூசணியுடன் செல்ல அவசரப் படுத்தின?

- **பயிற்சித்தாள் 11.1** — 'வட்டத்திற்குள்ளாக்குதல்' வழங்குதல்.
- படவாசிப்பு
  - படத்தில் என்னென்ன?
  - பூசணியுடன் நாட்டைப் பார்க்க ஆசைப் பட்டு வந்தவர்கள் யார் யார்?
  - படத்திலுள்ள காய்கறிகளை மட்டும் வட்டத்திற்குள்ளாக்குங்கள்.

- கதைக் கூற்று – தொடர்ச்சி

இவ்வாறு பூசணி மலைகளும், மேடுகளும் ஆற்றின் கரையும், வயலும், தோட்டமும் கடந்து சாலையை அடைந்தது. அப்போது அதோ ஒருவர் பூசணியைப் பார்த்து ஓடி வருகிறார்.

''ஹோய்.... இதோ ஒரு பூசணி உருண்டு போகிறது. அதைப்பிடி இதை வைத்து எனக்கு ஓலன் வைக்க வேண்டும். அவர் சத்தமாகக் கூறினார்.

பூசணி ஓடியது. அவரும் பின்னால் ஓடினார். ஒரு வளைவை அடைந்த போது ஆட்கள் கூடினர். "பிடி..... பிடி...." அவர்கள் கூறினர்.
"எனக்கு இதை வைத்து பூசணி எரிசேரி வைக்க வேண்டும்."
"எனக்கு இதைக் கொண்டு பூசணிப் பாயசம் வைக்க வேண்டும்?"
"எனக்கு இதை வைத்து பூசணிக் குழம்பு வைக்க வேண்டும்."
இவ்வாறு கூறிக் கொண்டே ஏராளமானோர் பூசணியின் பின்னால் ஓடினர்.
"எங்கு ஒளிந்து கொள்ளலாம்? பயந்து நடுங்கி அழுதுகொண்டே பூசணி ஓடுகிறது.
"தோம்...... தொம்..... தோ...... திம்...... திம்....."
சாலையில் உள்ள வளைவில் பூசணி தலை குப்புற விழுந்து புரளவும், உருளவும் தொடங்கியது. சுர்ர்ர்ர்.... சுர்ர்ர்..... இவ்வாறு உருண்டு செல்வது நல்ல சுகம். பூசணிக்கு மகிழ்ச்சியானது. அவ்வளவு வேகத்தில் பூசணியுடன் செல்ல யாருக்கும் இயலவில்லை.
"ஹய்யா........ ஹு....... ஹு....... பூசணி சத்தமாகக் கூறியது.
ஆனால், திரும்ப வீட்டிற்குப் போக வேண்டுமே...... என்ன செய்யலாம்? எவ்வாறு திரும்ப வீட்டிற்குச் செல்வது. பூசணி வந்த வழியை நண்பர்கள் கூறுங்கள்.
மலையின் அடிப்பகுதிக்கு திரும்ப வந்த பூசணி பார்த்த காட்சி என்னவென தெரியுமா? தன்னுடன் வர அடம்பிடித்து அழுதவர்களுக்கும் அவசரப்படுத்தினவர்களுக்கும் என்ன நிகழ்ந்தது என அறிந்து கொள்ள வேண்டாமா? இதோ கேளுங்கள்.

- பாடல் — அறுவடைப் பாடல் பாடுகிறார்கள்.

"ஒன்றாம் வேலியில் சென்று பறித்தேன்
ஒன்றரைக் கூடை வெள்ளரிக்காய்.
"இரண்டாம் வேலியில் சென்று பறித்தேன்
இரண்டரைக் கூடை பூசணிக்காய்.
...........................................................................
...........................................................................

இந்தக் காய்கறிகளை எல்லாம் எதற்காகப் பறித்திருப்பார்கள்? (சுதந்திர பிரதிபலிப்பு)

நடிப்பு : ஒருவர் பூசணியாக நடித்தல், பிறர் பூசணியைக் காண்பதும் பிடிக்க ஓடுவதுமாக நடித்தல்.

## மதிப்பீடு

- காய்கறிகள் அனைத்தையும் ஒரு வட்டத்திற்குள்ளாக்க இயல்கிறது.
- குழுவாக்கியதன் உத்தியைக் கூற இயல்கிறது.
- சூழலுக்கேற்ற கதாபாத்திரங்களாக நடிக்க இயல்கிறது.

- ஆசிரியைக்கு

1. காய்கறிகளை உணவில் உட்படுத்த வேண்டியது ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது என்ற கூற்றை பொருத்தமான கதைச் சூழல்களில் வழங்க வேண்டும்.
2. கதைக் கூற்றில் சேர்க்கப்பட்டுள்ள காய்கறிகளின் பெயர்கள் அனைத்தையும் அறுவடைப் பாடலில் உட்படுத்த வேண்டும்.

## பயிற்சித்தாள் – 11.2 எண்ணிக்கை எத்தனை கூறலாமா?

**வளர்ச்சி மண்டலம்** • அறிவு சார் வளர்ச்சி

**திறன்** : எண்களை எண்ணவும், எண்கள் பொருட்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தவும் இயல்கிறது. (44)

**கருத்து** : பலவகை காய்கறிகள் உள்ளன.

**கருவிகள்** : பயிற்சித்தாள், கிரையான்ஸ்

**சூழல்** : காய்கறிகளின் படங்களை ஒட்டியபின்

**செயல்முறை**

• கதைக்கூற்று : கூடையில் சாடலாம்.

மலையின் அடிப்பகுதியிலுள்ள காய்கறித் தோட்டத்திலிருந்து பறித்தெடுத்து குவித்து வைத்த காய்கறிகளெல்லாம் அசையாமல் கிடந்தன. திடீரென வெண்டைக்காய்க்கு ஒரு கருத்து தோன்றியது. ஒரு போட்டி நடத்தினாலோ? பிறகு ஒன்றும் சிந்திக்கவில்லை. வெண்டைக்காய் குதித்தெழுந்து சத்தமாகக் கூறியது.

“ஒரே சாட்டத்தில் கூடையில் இருக்க வேண்டும்...” கூடைகள் வரிசையாக வைக்கப்பட்டன. முருங்கைக்காய் அண்ணன் தூரத்திலிருந்து விசில் ஊதியது. பூசணி ஓடிச்சென்று கூடையில் ஒரே தாவு தாவியது. கூடை உருண்டது. பூசணி கூடையின் அடியில் ஆனது. அனைவரும் சிரித்தனர். அடுத்தது புடலங்காய். புடலங்காய் எழும்பி குதித்தது. பக்கம் திரும்பி உருண்டு, நிமிர்ந்து ஒரே தாவல். கூடைக்கு அப்பால் சேற்றினில் விழுந்தது.!

ஹ..... ஹ..... ஹ.... அனைவரும் சிரியோ சிரியென சிரித்தனர். பூசணியும் சத்தமாகச் சிரித்தது. தக்காளியோ உடலை மினுமினுப்பாக்கி மெதுவாக நடந்து சென்று ஒரே தாவல் – கூடையில் விழுந்தது.

அடுத்தது வழுதனை. வழுதனை ஓடிச் சென்று தாவத் தொடங்கியபோது குப்புற விழுந்து மூக்கு அடிபட்டது.

போட்டியில் தக்காளி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

“நில்லுங்கள் நில்லுங்கள்” – வெள்ளைப் பூசணி கூறியது.

‘நானும் போட்டி போடுகிறேன்” – வெள்ளைப் பூசணி ஓடிச் சென்று கூடையை வட்டமிட்டுச் சுற்றி மேல் நோக்கிக் குதித்து கீழே உருண்டு காலால் குதித்து மீண்டும் உயர்ந்து. கூடையின் மையப் பகுதியில் விழுந்தது. அனைவரும் கைதட்டினர்.

“அப்போது வெற்றிபெற்றது யார்?”

தக்காளியும் வெள்ளைப் பூசணியும் பரிசைப் பங்கிட்டனர். போட்டியில் தோல்வியடைந்தவர்களும், வெற்றி பெற்றவர்களும் நண்பர்களுடன் சேர்ந்து கூடையில் இருந்தனர். புகைப்படம் எடுத்தனர். புகைப்படத்தைப் பார்க்க வேண்டாமா நண்பர்களே...... (வரிகள் சேர்த்து பாடுதல்)

• **பயிற்சித்தாள் 11.2** – ‘எண்ணிக்கை எத்தனை’ வழங்குதல்

• படவாசிப்பு
  • மிகவும் குறைந்த எண்ணிக்கை காய்கறி எதுவெனக் கண்டறிதல் (✓) அடையாளப்படுத்துதல்.
  • மிகவும் கூடுதல் எண்ணிக்கை உள்ள காய்கறி எதுவெனக் கண்டறிந்து கூறுங்கள்.

## மதிப்பீடு

• கூடுதல், குறைவு ஆகியன கண்டறிய இயல்கிறது.

# மையக் கருத்து 12 காந்திஜெயந்தி

காந்தித் தாத்தாவை குழந்தைகளுக்கு மிகவும் விருப்பம். காந்தியடிகளைக் குறித்து பாடல்கள் வாயிலாகவும் கதைகள் வாயிலாகவும் அதிகமான காரியங்களை அறிந்துகொள்ள இந்த மையக்கருத்திலுள்ள செயல்பாடுகள் மிகவும் உதவும். காந்தியடிகளின் பிறந்த நாள் கொண்டாட்டத்தின் பகுதியாக பள்ளிக் கூடத்தைச் சுத்தப்படுத்த வேண்டும், அலங்கரிக்க வேண்டும். இனிப்புகள் வழங்க வேண்டும். இவ் ஏற்பாடுகள் அனைத்தையும் பார்ப்பதற்கும் தங்களால் இயன்ற அளவு செயல்பாடுகளில் எல்லாம் பங்கு பெறவும் குழந்தைகளுக்கு வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதுவே மையக்கருத்தின் நோக்கமாகும்.




## செயல்பாட்டு வரிசை

1. பாடல் – காந்தித்தாத்தா

↓

2. பயிற்சித்தாள் 12.1 "தோரணம் முழுமையாக்குங்கள், அலங்கரியுங்கள்' வழங்குதல்.

↓

3. பள்ளியை அலங்கரிப்பதற்கான பொருட்களை ஒழுங்கு செய்தல் (இலை, காகிதம்/ வண்ணம் தீட்டுதல்).

↓

4. நினைவு கூர்வோம், சொல்வோம் – அலங்காரப் பொருட்கள்.

↓

5. வகுப்பறை அலங்கரித்தல்

↓

6 ஊர்வலம்

## பயிற்சித்தாள் – 12.1 தோரணத்தை முழுமையாக்குங்கள் அலங்கரியுங்கள்.

**வளர்ச்சி மண்டலங்கள்**
- உடல் இயக்க வளர்ச்சி
- மொழி வளர்ச்சி

**திறன்கள்**
1. சுதந்திரமாக படங்கள் வரைந்து வண்ணம் தீட்ட இயல்கிறது. (5)
2. பாவனையை உட்கொண்டு கதைகள், பாடல்கள், நிகழ்ச்சிகள் ஆகியன வெளியிட இயல்கிறது (17)
3. பல்வேறு சூழல்களிலுள்ள தனது உற்று நோக்குதல்கள், கருத்துகள், குறிப்புகள் ஆகியன நண்பர்களுடனும், முதியவர்களுடனும் பொது அரங்குகளிலும் கூற இயல்கிறது (24).

**கருத்துகள்** 1. காந்திஜெயந்தி, குழந்தைகள்தினம் போன்ற தினங்களை பள்ளிகளில் கொண்டாடுவது உண்டு.
2. கொண்டாட்டத்தின் பகுதியாக வீட்டையும், சுற்றுப்புறத்தையும், பள்ளியையும் அலங்கரிப்பதுண்டு.

**கருவிகள்** • பென்சில், கிரையான்ஸ்

சூழல் • காந்தி ஜெயந்தியுடன் தொடர்புடைய பாடல்கள் பாடுதல், காந்தியடிகளின் புகைப்படம் காட்சிப் படுத்துதல். காந்தியடிகளின் பிறந்த நாள் அக்டோபர் 2 என்பதை நினைவுபடுத்துதல்.

செயல்முறை

• பாடல் :

வந்தார் வந்தார் எங்கள் தாத்தா
வட்டக் கண்ணாடி கண்ணில் வைத்து
ஊன்று கோலும் ஊன்றி நடந்து
வந்தார் வந்தார் எங்கள் தாத்தா

வந்தார் வந்தார் நமது தாத்தா
பல் இல்லாதொரு மோணை காட்டி
புன்சிரிப்பு நிறைய தந்து
வந்தார் வந்தார் நமது தாத்தா

வந்தார் வந்தார் நமது தாத்தா
பொய்யே கூடாதென நினைவுபடுத்தி
வஞ்சனை கூடாதென நினைவுபடுத்தி
வந்தார் வந்தார் நமது தாத்தா

• **அனுபவம் பகிர்ந்துகொள்ளுதல்:** உங்களது பிறந்த நாளை எவ்வாறு கொண்டாடுவீர்கள்? பிறந்த நாளில் யார் யார் வருவார்கள்? என்னென்ன பரிசுகள் தருவார்கள்? என்னென்ன உணவுகள் இருக்கும்? (பிறந்த நாள் கேக்கு, பிறந்த நாள் விருந்து.....) குழந்தைகள் அவரவர்களின் அனுபவங்களைக் கூறுதல்.

• பிறந்த நாளன்று வீட்டை அலங்கரிப்பதுண்டா? எவ்வாறு? இந்தச் சூழலில் பிறந்த நாளன்று வீட்டை அலங்கரித்து புகைப்படம், காணொளி ஆகியன காட்சிப்படுத்தலாம்.
• காந்தியடிகளின் பிறந்த நாளன்று பள்ளியை எவ்வாறு அலங்கரிக்கலாம்?

**பயிற்சித்தாள் 12.1 –** "தோரணத்தை முழுமையாக்குங்கள், அலங்கரியுங்கள்" வழங்குதல்.

• பொருத்தமான வண்ணம் தீட்டி தோரணம் முழுமையாக்குதல்.
• படத்தில் குழந்தை விருப்பமுள்ளதை வரைந்து சேர்க்கட்டும்.
• படத்தைக் குறித்துக் கூறுதல்.

## மதிப்பீடு

• பொருத்தமான வண்ணம் தீட்டி தோரணத்தை முழுமைப்படுத்த இயல்கிறது.
• படத்தைக் குறித்து தனது சொந்த கருத்துகளையும் கண்ணோட்டத்தையும் நண்பர்களுடன் கூற இயல்கிறது.

## மையக் கருத்து 13 உயிரினங்கள் - வளர்ப்பு விலங்குகள் - வளர்ப்புப் பறவைகள்

உணவும், வீடும், சுற்றுப்புறமும் ஆகிய மையக் கருத்துகளுடன் தொடர்புடைய சில வளர்ப்பு உயிரினங்களை குழந்தை அறிந்து கொண்டுள்ளது.

சுற்றுப்புறத்தை அறிந்து கொள்ளவும் உற்றுநோக்கல் திறனை வளர்க்கவும் குழந்தைக்கு இவற்றின் தொடர்ச்சியும் வளர்ச்சியும் தேவையாகும்.

வளர்க்கும் விலங்குகள், வளர்க்கும் பறவைகள், சுற்றுப்புறத்திலுள்ள பிற 'உயிரினங்கள் ஆகியவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளையும், சிறப்புகளையும் புரிந்துகொள்ள இந்த மையக்கருத்து பரிமாற்றத்தின் வாயிலாக இயல வேண்டும்.

உயிரினங்களிடம் அன்பு செலுத்தவும் பராமரிப்பதற்குமான மனப்பாங்கு உருவாவதற்கு ஏற்ற அனுபவச் செயல்பாடுகளை ஒழுங்கு செய்ய கவனிப்பீர்கள் அல்லவா.




### செயல்பாட்டு வரிசை

1. உயிரினங்களைக் குறித்த பாடல் பாடுதல்
↓
2. உயிரினங்களின் அசைவைப் போலச் செய்தல்
↓
3. உயிரினங்களின் படம் வரைதல் (கட்டவுட்டு/ஸ்டென்சில்)
↓
4. பயிற்சித்தாள் 13.1 – "யார் கூடுதல்?" வழங்குதல்
↓
5. ரோல்பிளே (பாத்திர நடிப்பு)
↓
6. பயிற்சித்தாள் 13.2 – "வண்ணம் தீட்டுங்கள்" வழங்குதல்
↓
7. உயிரினங்களின் சத்தத்தைப் போலப் பாடுதல்.
↓
8. பயிற்சித்தாள் 13.3 – "நண்பர்களைக் கண்டு பிடிப்போம்" வழங்குதல்.
↓
9. கொம்பர கொம்பர விளையாட்டு
↓
10. உயிரினங்களுடன் தொடர்புடைய பாடல்கள் கதைகள் கேட்டல் – ICT
↓
11. இயற்கையை இரசித்து நடத்தல்

### பயிற்சித்தாள் – 13.1 "யார் கூடுதல்?"

**வளர்ச்சி மண்டலங்கள்**
- மொழி வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு
- அறிவு சார் வளர்ச்சி

**திறன்கள்**

1. ஐம்புலன்களைப் பயன்படுத்தி பொருட்கள் உயிரினங்கள் ஆகியவற்றை உற்று நோக்கி சிறப்புகளைக் கண்டறியவும் வாய்மொழியாகக் கூறவும் இயல்கிறது. (30)
2. கதைகள்/சூழல்கள் ஆகியவற்றிலுள்ள கதாபாத்திரங்களின் பகுதிகளை நடிக்க இயல்கிறது. (75)

**கருத்துகள்**

1. பசு, ஆடு, கோழி, வாத்து, பூனை, நாய், முயல் போன்ற உயிரினங்களை வீட்டில் வளர்க்கிறார்கள்.
2. வளர்ப்பு உயிரினங்களால் பல நன்மைகள் உள்ளன. (பால், முட்டை, மாமிசம்......)

**கருவிகள்**

சூழல்

- கிரையான்ஸ்
- குழந்தைகளுக்குத் தெரிந்த உயிரினங்களின் படங்கள் சுதந்திரமாகவும் கட்டவுட்டு/ ஸ்டென்சில் பயன்படுத்தி வரைகின்ற செயல்பாட்டிற்குப் பின்.

**செயல்முறை**

- கதைக்கூற்று

**சாணிக் குழந்தைகள்**

ரோஸி பசுவும், கரும்பி நாயும், புள்ளிப் பூனையும், காது நீண்ட முயலும் அனைத்தும் மீனுவின் வீட்டில்தான் வாழ்கின்றன. மதியம் ஆகும்போது இவர்கள் அனைவரும் ஓர் இடத்தில் கூடுவது உண்டு. பூனையின் இரண்டு குட்டிகளும், கரும்பி நாயின் மூன்று குட்டிகளும் சேர்ந்து என்னென்ன குறும்புகள் காட்டுகின்றன. நல்ல மகிழ்ச்சியாகும்.

சில வேளை ரோஸியின் மேல் ஏறி, உடல் வழியாக கீழே உருளுவார்கள். சில வேளை முயல் குதிப்பது போல குதித்துத் தட்டுத் தடுமாறி விழுவர். மரத்தில் ஏறி கீழே குதிப்பர். உருண்டு புரண்டு குதித்தாலும் பூனைக் குட்டிகள் நான்கு கால்களில்தான் நிற்பார்கள்.

ஒரு நாள் குழந்தைகள் விளையாடச் சென்ற நேரத்தில் ரோஸியும், கரும்பியும், புள்ளிப் பூனையும், முயலும் சேர்ந்து நகைச்சுவையுடன் சிரித்துப் பேசிக் கொண்டு இருந்தன. அப்போது பூனை கேட்டது/ “முயலே உனது பற்கள் ஏன் நீளமாக இருக்கின்றன?”

“உனது பற்கள் ஏன் கூர்மையாக இருக்கின்றன?” முயல் திரும்பக் கேட்டது. அதைக் கேட்ட பசு பற்களைக் காட்டி சிரித்துக் கொண்டே கேட்டது!

‘‘எனது பற்கள் ஏன் பரந்து இருக்கிறது?’’ அனைவரும் கலகலவென சிரித்தனர். அப்போது அதோ சில கறுப்பு உயிரினங்கள்! பசுவும், நாயும் பூனையும், முயலும் ஆச்சரியப் பட்டன. கூர்ந்து பார்த்தன.

மீண்டும் கூர்ந்து பார்த்தன. அய்யய்யோ! இது நமது குழந்தைகள் அல்லவா? இவர்களின் கோலம்தான் என்ன? நாற்றமடிக்கிறது.

அனைவரும் மூக்கைப் பொத்திக்கொண்டனர். உடல் முழுதும் சாணியால் மூடப்பட்டிருந்தது. ‘‘என்ன நடந்தது?’’ ஒன்றுமில்லை. சாணிக் குழியின் மறுபக்கம் தாவ போட்டி போட்டதுதான்.”

‘ப்ளோம்’ – அனைவரும் குழியில் விழுந்து விட்டனர். இனி என்ன செய்யலாம்? புள்ளிப் பூனை கேட்டது.

ஒன்றும் செய்வதற்கில்லை. ''மீனுவிடம் கூறலாம்.'' – ரோஸிபசு கூறியது. அவர்கள் மீனுவின் அருகே ஓடினர். பின்னால் சாணிக் குழந்தைகளும் சென்றனர்.

(சாணிக் குழந்தைகளை மீனு குளிப்பாட்டுவதை குழந்தைகள் நடித்துக் காட்டுதல்.)

சாணிக் குழந்தைகளைப் பார்க்க வேண்டாமா?

- **பயிற்சித்தாள் 13.1** – "யார் கூடுதல்" வழங்குதல்.

படவாசிப்பு

- என்னென்ன காண்கிறீர்கள்?
- யாருக்கு கூடுதல் குழந்தைகள்?
- யாருக்கு குறைவான குழந்தைகள்?
- கொம்புள்ள உயிரினங்கள் எத்தனை?
- படத்தில் உள்ள உயிரினங்களின் சிறப்புகளை வாய் மொழியாகக் கூறுதல். (பிற உயிரினங்களிலிருந்து இவற்றிற்குள்ள வேறுபாடு கூறச் செய்தல். (எ.கா. பசு. நாய்)

ஆசிரியருக்கு

- மணல் தட்டு/Big picture பயன்படுத்தி கதைக்கூற்றை வெளியிடல்.
- படவாசிப்பில் உயிரினங்களின் படத்தை உற்று நோக்கி சிறப்புகளை வாய் மொழியாகக் கூறுவதற்கான வாய்ப்பு கொடுத்தல்.

## மதிப்பீடு

- கூடுதல், குறைவு கண்டறிய இயல்கிறது.
- உயிரினங்களை உற்றுநோக்கி சிறப்புகளைக் கண்டறிந்து வாய்மொழியாகக் கூற இயல்கிறது.

## பயிற்சித்தாள் – 13.2 "வண்ணம் தீட்டுங்கள்'

**வளர்ச்சி மண்டலங்கள்**

- அறிவு சார் வளர்ச்சி
- உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள்**

1. கண்டறிதல் செயல்பாடுகளில் ஈடுபடவும் அனுபவத்தின் பின் துணையோடு முடிவை வெளியிடவும் இயல்கிறது. (31)
2. கிரையான் பயன்படுத்தி வண்ணம் தீட்ட இயல்கிறது. (5)

**கருத்துகள்**

1. சில பறவைகளை வீட்டில் வளர்ப்பதுண்டு
2. சில பறவைகளால் நன்மைகள் உள்ளன. (கோழி, வாத்து.....)

**கருவிகள்**

- கிரையான்ஸ்

**சூழல்**

- கதை வெளியிடவும் முகமூடியைப் பயன்படுத்திய பாத்திர நடிப்பு வெளியிடுவதற்குப் பின்பும், வளர்ப்பு உயிரினங்களை, விலங்குகள் பறவைகள் என வகைப்படுத்துகின்ற விதத்திலுள்ள கலந்துரையாடல் சூழலில் பயிற்சித்தாள் வழங்கலாம்.

**செயல்முறை**

- கதைக்கூற்று : முகமூடியை அணிந்து குழந்தைகள் அனைவரும் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது அதோ நாயின் முக மூடி அணிந்து ஒரு குழந்தை வந்து அனைவரையும் கடிக்கப் பின்னால் ஓடினான்.

உண்ணிக் குட்டன் அழுதான்.

"என்னைக் கடிக்காதே...... என்னைக் கடிக்காதே.." இதனைக் கேட்டு அம்மா அவனை கட்டிலிலிருந்து தூக்கியெடுத்தாள்.

கனவு எனத் தெரிந்தும் அவனது பயம் மாறவில்லை. அம்மா அவனுக்கு அம்மிணிப் பசுவின் பாலைக் கொடுத்தாள். உண்ணிக்

குட்டனின் பயம் மாறட்டும். எனினும் அவன் பயம் மாறவில்லை.

கொக்கரக் கோழியின் முட்டையை வேகவைத்துக் கொடுத்தாள்.

"சாப்பிடு உண்ணி, பயம் மாறட்டும்" எனினும் அவன் பயம் மாறவில்லை. குவா! குவா! வாத்தின் முட்டையைப் பொரித்துக் கொடுத்தாள்.

"சாப்பிடு உண்ணி பயம் மாறட்டும்" எனினும் அவன் பயம் மாறவில்லை.

"அய்யோ! இனி என்ன செய்யலாம்?" அப்போது உண்ணிக்குட்டன் கூறினான்." எனக்கு பாப்பிக் குட்டி ஆட்டின் பால் காய்ச்சி தாருங்கள்.... தந்தால் தான் எனது பயம் மாறும்."

"அடத் திருடா"

அம்மா உண்ணிக்குச் செல்லமாக ஒரு சிறு அடி கொடுத்தாள். பின்பு ஆட்டின் பாலைக் காய்ச்சிக் கொடுத்தாள்.

உண்ணி கூறினான்!

"ஒ...... இப்போதுதான் எனது பயம் போனது" பின்பு அம்மாவும் உண்ணியும் ஒன்றாகச் சிரித்து விளையாடி ஒரு பாடல் பாடினர்.

- பாடல்

"ப....... ப....... பா
பாப்பி ஆடு பால் தரும்
கு........... கு................. கூ
குவா! குவா வாத்து முட்டை தரும்
கொ..... கோ....... கோ......
கொக்கரக் கோழி முட்டை தரும்"

உண்ணிக் குட்டனின் வீட்டில் உள்ளவர்களைக் குறித்து அறிந்தீர்கள் அல்லவா? இனி அவர்களைக் கண்டு பிடியுங்கள். கண்டு பிடித்தால் மட்டும் போதாது. அவற்றிற்கு நிறமும் கொடுக்க வேண்டும். குவா! குவா வாத்தும், பாப்பியும், கொக்கரக்கோ கோழி எல்லாம் சேர்ந்து அதோ நிற்கிறது. கண்டு பிடியுங்கள்.

- **பயிற்சித்தாள் 13.2** – "வண்ணம் தீட்டுங்கள்" வழங்குதல்.
- படவாசிப்பு
  - உண்ணிக் குட்டனின் வீட்டில் யார் யார் உள்ளனர்? கூறுங்கள்.
  - இந்தப் படத்தைப் பாருங்கள். படத்தில் விலங்குகள் எத்தனை?
  - என்னென்ன பறவைகள்? எண்ணிக்கை எத்தனை?
  - அவற்றின் பயன்கள் என்னென்ன?
  - இனி உண்ணிக் குட்டனின் வீட்டிலுள்ள பறவைகளுக்கு மட்டும் வண்ணம் தீட்டுங்கள். பின்பு அவைகள் யார் எனக் கூறுங்கள்.
  - எதற்காக இவற்றை வீட்டில் வளர்க்கிறார்கள்?

முடிவுகள் கூறுதல்

- ஒரு உயிரினம் பறவையா என எவ்வாறு அறியலாம்? சிறப்புகளைக் கூறலாமா?

## மதிப்பீடு

- பறவைகளைப் புரிந்துகொண்டு வண்ணம் தீட்ட இயல்கிறது.
- பறவைகளின் சிறப்புகளைக் கூற இயல்கிறது. வளர்க்கும் பறவைகளின் பயன்களைக் கூற இயல்கிறது.

## பயிற்சித்தாள் – 13.3 நண்பர்களைக் கண்டு பிடிப்போம்

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

| | | |
|---|---|---|
| **திறன்** | : | 1 முதல் 5 வரையிலான எண்களை எண்ணவும் எண்களையும் பொருட்களின் எண்ணிக்கையையும் தொடர்புபடுத்தவும் இயல்கிறது (44). |
| **கருத்துகள்** | : | பசு. ஆடு, காளை, நாய், பூனை, முயல், கோழி போன்ற உயிரினங்களை வீட்டில் வளர்க்கிறார்கள். |
| **கருவிகள்** | : | பென்சில் |
| **சூழல்** | : | உயிரினங்களின் சத்தத்தைப் போன்று பாடிய பாட்டிற்குப்பின் பயிற்சித்தாள் வழங்கலாம். |

**செயல் முறை**

- உயிரினங்களின் சத்தத்தைப் போலச் செய்தல் :

வீட்டிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் ஒன்று கூடின. "நாம் இன்று ஒரு பாட்டுக் கச்சேரி நடத்தலாமா?'' நந்தினிப்பசு கூறியது. அனைவரும் கை தட்டினர். பாட்டுப் பாடும் விலங்குகள் அனைத்தும் தலையை அசைத்தன. சிலர் கொம்புகளை ஆட்டினர்.

"முதலாவது பாடுவது யார்?" பாலுப் பூனை கேட்டது, அனைவரும் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு குரைக்கும் பாடல் கேட்டது.

அறுந்த வாலுடன், கூர்மையான காதுகளை ஆட்டி ஒருவர் முன் வந்தார்.

"எலும்பொன்று கிடைத்ததே பௌ பௌ பௌ பௌ
கடித்தொன்று அதை தின்றேனே பௌ பௌ பௌ பௌ
வயறும் நிறைந்ததே பௌ பௌ பௌ பௌ

அறுந்த வால் நாய் பாடலை முடித்தது. இந்த பாடல் பிடித்ததா? இனி நீங்களும் பாடிப்பாருங்கள்.

"அடுத்துப் பாடுவது யார்?"

அதோ வருகிறது பாலுப் பூனை. ஒரே தாவலில் முருங்கை மரத்தில் ஏறி நின்று பாலுப் பூனையும் பாடத் தொடங்கியது.

"மியாவ்..... மியாவ்..... மியாவ்..... மியாவ்.......
வயறு நிறைந்ததே மியாவ்..... மியாவ்.......
பாடல் வருகிறதே மியாவ்.... மியாவ்......

"நல்ல பாடல், நல்ல பாடல்" அனைவரும் கை தட்டினர். இனி நீங்களும் பாடிப்பாருங்கள், இனி யார்? இனி யார்? கேட்ட போது பாப்பிக் குட்டி ஆடு சாடி வந்தது.

"ஈ ஹூ..... இம்பே பே...........
இராகத்தில் பாடலாம் இம்பே இம்பே"
பலா இலை பார்த்ததால் இம்பே இம்பே

பாப்பிக் குட்டிக்கும் ஒரு கைத்தட்டு கிடைத்தது. அந்தப் பாடலை நீங்களும் பாடிப்பாருங்கள்

காதினை கூர்மையாக வைத்திருந்த நந்தினிப் பசுவும் நீட்டிப் பாடத் தொடங்கியது.

"இம்பே...... இம்பே...... இம்பம்பே
வயிறு நிறைந்ததே இம்பம்பே
பாடல் வருதே இம்பம்பே......" பாடல் பிடித்ததா? நீங்களும் பாடுங்கள்.

பின்பு பாட்டுப்பாட யாரும் இல்லை.

"பாடின பாடல்கள் அனைத்தும் உங்களுக்கு பிடித்தனவா?

"மிகவும் நன்றாகப் பாடியது யார்?"

பாப்பிக் குட்டி ஆடு பாடியது எவ்வாறு? இம்பே இம்பே...........

பாலுப் பூனை பாடியதோ? மியாவ்.... மியாவ்.... மியாவ்.... மியாவ்.....

வால் அறுந்த நாய் பாடியதோ? பௌ பௌ பௌ பௌ.

நந்தினிப் பசு பாடினதோ? இம்பே..... இம்பே.... இம்பம்பே..... "உங்களுக்குப் பிடித்த பாடல் எது?" அதை ஒரு முறை கூட இராகத்தில் பாடலாமா?

- கதைக் கூற்று : உண்ணிக்குட்டனின் வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் சேர்ந்து ஆற்றின் கரையில் பயணம் செல்கின்றனர். பசு சைக்கிளில் தான் சென்றது. க்ணிங்....க்ணீங்..... பலமாக மிதித்தது. கோழிகள் இரண்டும் வேறொரு சைக்கிளில் ஏறின. க்ணீங்.... க்ணீங்..... வேகத்தைக் கூட்டின. பசு வழி கொடுக்கவில்லை பசுவும் வேகத்தைக் கூட்டியது. ஒரு கோழி பறந்து பசுவின் தோளில் ஏறி இருந்தது. பசு வளைந்து நெளிந்தது. சைக்கிள் அங்கும் இங்கும் சாய்ந்தாடியது. பின்னால் வருகின்ற வாகனங்களுக்குச் செல்ல முடியவில்லை. பின்னால் வந்த வாத்து, லாரியை மிதித்து நிறுத்தியது. வாத்துகள் அனைத்தும் பயந்து அழுதன. குவாக்..... குவாக்..... ஆடுகள் இடிக்காமலிருக்க மோட்டார் சைக்கிளை சட்டென திருப்பின. ம்மே... ம்மே... ஆடுகள். சத்தமிட்டன. ஆட்டோவில் வந்த முயலும் நண்பர்களும் இதனைப் பார்த்து ஆர்ப்பரித்து சிரித்தனர். அப்பொழுது ஆடுகளும் சிரித்தன. ம்மே.... ம்மே... (உயிரினங்களின் சத்தத்தைப் போலச் செய்தல்) பிற வாகனங்களில் வந்தவர்களும் அவர்களோடு சேர்ந்தனர். யாரெல்லாம் எனப் பாருங்கள்.

- **பயிற்சித்தாள் 13.3** – 'நண்பர்களைக் கண்டுபிடிப்போம்" வழங்குதல்
- பட வாசிப்பு
  - படத்தில் என்னென்ன?
  - ஒவ்வொரு வாகனத்திலும் எத்தனை பேர்?
  - ஒரே எண்ணிக்கை உள்ளவற்றைக் கண்டு பிடித்து வரைந்து இணைத்தல்.
  - குழுவில் சேராதது யார்?
- ஆசிரியைக்கு
  - பட உதவியுடன் பாடல்களை வகுப்பில் எழுதி வெளியிடலாம்.
- கதைக் கூற்று (தொடர்ச்சி)

அனைவரும் ஆற்றின் கரையில் வந்தடைந்தனர். எண்ணிப் பார்த்தனர். ஒருவரைக் காணவில்லை. சேவல் கோழி எங்கே? அனைவரும் பசுவைப் பார்த்தனர். "பசு மிதித்துத் தள்ளினதுதான்." "நான் ஒன்றும் செய்யவில்லை" பசு கூறியது.

அனைவரும் வீட்டிற்குத் திரும்பினர். இருபக்கமும் பார்த்துப் பார்த்துதான் போயினர். அவ்வாறு சென்றபோது அதோ சில கோழித்தூவல்கள் கிடக்கின்றன. காட்டிலிருந்து ஒரு அழுகைச் சத்தம் கேட்டது. அனைவரும் காட்டிற்குள் சென்றனர். சேவல் கோழி கால் ஒடிந்து கிடந்தது. அனைவரையும் பார்த்தபோது கோழியின் அழுகைச் சத்தம் கூடியது. பரவாயில்லை. முயலுகள் ஆறுதல் கூறின. கோழியின் காலில் மருந்து வைத்துக் கட்டினர். முயல்களுடன் ஆட்டோவில் வீட்டிற்குத் திரும்பியது.

## மதிப்பீடு

- ஒரே எண்ணிக்கை உள்ளவற்றைக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- வரைந்து இணைக்கப்பட்டுள்ளது.

# மையக் கருத்து 14 வனவிலங்குகள்

அதிகமான குழந்தைகளுக்கும் வனவிலங்குகளை நேரடியாகப் பார்ப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருக்காது. படக் கதைகள் வாயிலாகவும் காணொளி வாயிலாகவும் வனவிலங்குகளை அறிமுகப் படுத்தலாம் அல்லவா. இந்த மையக் கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் பல்வேறு வன விலங்குகளை அறிமுகப்படுத்துவதோடு அவற்றின் சிறப்புகளையும் புரிந்து கொள்ள இயலும். பல்வேறு வளர்ச்சி மண்டலங்களுக்குப் போதுமான முக்கியத்துவம் கிடைக்கும் வண்ணம் செயல் திட்டம் செய்து பண்புகளையும் மனப்பாங்குகளையும் உருவாக்கவும் இயல வேண்டும்.




## செயல்பாட்டு வரிசை

1. விளையாட்டு – அசைவைப் போலச் செய்தல். எ.கா: யானை தலையை ஆட்டி, காதை அசைத்து, ஆடிப்பாடி வரட்டும்.
↓
2. கதை கேட்போம் – கரடிக் குட்டியின் பிறந்தநாள்.
↓
3. பயிற்சித்தாள் 14.1 – “வழிகாட்டுங்கள்” வழங்குதல்.
↓
4. பயிற்சித்தாள் 14.2 – “சிறியது முதல் பெரியது வரை” வழங்குதல்.
↓
5. காடும் விலங்குகளும் (காணொளி)
↓
6. காட்டில் பார்த்தவை (காணொளியில் பார்த்த காரியங்களைக் கூறுதல்)
↓
7. முகமூடி நடிப்பு (பாத்திர நடிப்பு) – ரோல்பிளே
↓
8. “எத்தனை பேர் எத்தனை பேர்” விளையாட்டு
↓
9. பெருமை பேசுதல் (யானையும் ஒட்டகச்சிவிங்கியும் – முகமூடி உபயோகித்தல்)
↓
10. உரையாடல் பாடல் வெளியிடல்
↓
11. விலங்கு உருவம் உருவாக்குதல் (மைதா மாவு)
↓
12. பயிற்சித்தாள் 14.3 ‘டோக்கன் வழங்கலாம்’ (1–5 வரை இணைத்தல்)
↓
13. விளையாடலாம் – நடிக்கலாம்

↓

14. கட்டவுட்டு படம் வரைதல்

↓

15. வண்ணம் தீட்டுதல்.

↓

16. குழுப் பாட்டு (வன உயிரினங்கள்)

## பயிற்சித்தாள் – 14.1 வழி காட்டுங்கள்

**வளர்ச்சி மண்டலங்கள்**
- உடல் இயக்க வளர்ச்சி
- அறிவுசார் வளர்ச்சி

**திறன்கள்**
1. முன் எழுத்துச் செயல்பாடுகளில் ஈடுபடுதல் (13).
2. கண்டுபிடித்தல் செயல்பாடுகளில் ஈடுபடவும் அனுபவத்தின் பின்துணையோடு முடிவுகள் வெளியிடவும் இயல்கிறது (31).

**கருத்து** : காட்டில் பலவகை விலங்குகள் உள்ளன.

**கருவிகள்** : பென்சில், கிரையான்ஸ்

**சூழல்** : “கதை கேட்கலாம்” என்ற செயல்பாட்டிற்குப் பின் பயிற்சித்தாள் வழங்கலாம்.

**செயல்முறை**

- கதைக் கூற்று : ஒரு கதை கூறட்டுமா. யாருடைய கதை எனத் தெரியுமா? இந்தப் படத்தைப் பாருங்கள். யார் எனக் கூறுங்கள்? கரடியின் படம் காட்டுதல். இது குட்டிக் கரடி. இன்று அவளுடைய பிறந்த நாள்.
  பிறந்த நாளிற்கு யார் யாரை அழைத்துள்ளனர்? கூறுங்கள்.

- கதைக் கூற்று (தொடர்ச்சி)

நாட்டிலும் காட்டிலும் உள்ள நண்பர்கள் அனைவரையும் அவள் பிறந்த நாளுக்கு அழைத்தாள். கொண்டாட்டத்திற்கு குரங்கின் வாலாட்டமும் கழுதையின் பாட்டுக் கச்சேரியும் உள்ளது. நல்ல விருந்தும் உள்ளது. அனைவரும் செல்லத் தீர்மானித்தனர். யானை குளித்து பொட்டுவைத்து இறங்கியது. கௌமி பசு அலங்காரம் செய்து புறப்பட்டது.

யானைக்குட்டி நடந்து நடந்து கரடிக்குட்டியின் வீட்டை அடைந்தது. ஹாய்! தண்ணீர்! யானைக்குட்டி தடாகத்திலிருந்து தும்பிக்கையால் தண்ணீரை உறிஞ்சி வானத்தை நோக்கி பீய்ச்சி அடித்தது. ஹாய்! என்ன அழகு! கரடிக் குட்டி அனைவரையும் உள்ளே அழைத்தது. பிறந்த நாள் பரிசுகளைக் கொடுத்தனர். கன்றுக்குட்டி கரடிக் குட்டிக்கு ஒரு இனிப்பான முத்தத்தைப் பரிசாகக் கொடுத்தது.

பிறந்த நாள் அல்லவா: அனைவரையும் அழைக்கும் போது விருந்தும் இருக்குமல்லவா? உங்களது பிறந்த நாளில் விருந்து தயார் செய்வதுண்டா? குழந்தைகளின் சுதந்திர பிரதிபலிப்பு.

பிறந்த நாள் விருந்து முடிந்து குட்டிக்கரடியின் நண்பர்களான யானையும், பசுவும் ஒன்றாக வீட்டிற்குத் திரும்பினர். கரடிக்குட்டி இரண்டு பேருக்கும் ஒவ்வொரு அன்னாசிப்பழ மிட்டாய் கொடுத்தது. இருவரும் அன்னாசிப்பழ

மிட்டாயியைத் தின்று கொண்டே, நடந்து நடந்து சாலை சந்திப்பில் வந்தனர். அவர்களுக்கு சந்தேகம். வழி தவறாகுமா? இருவரும் தங்களது வீடுகளுக்குச் செல்ல வேண்டும். நடந்து நடந்து யானைக் குட்டிக்கு வழி தவறியது. யானைக்குட்டி நடந்து சென்றது பசுவின் வீட்டில். கன்றுக்குட்டி நடந்து நடந்து சென்றது யானையின் காட்டில். இரண்டு பேரும் திரும்ப நடந்தனர். இரண்டு பேரும் சென்ற வழியை வரையுங்கள்.

- **பயிற்சித்தாள் 14.1** – "வழிகாட்டுங்கள்" வழங்குதல்.

படவாசிப்பு

- படத்தில் யார் யாரெல்லாம் உள்ளனர்? பசு எங்கே வாழ்கிறது? கரடியின் வீடு எது? யானையின் வாழ்விடம் எங்கே? யானையும் பசுவும் தங்களது வீடுகளுக்குச் சென்ற வழியை வரையுங்கள்.
- யானையும் கரடியும் வன விலங்குகளாகும். முதலாவது இதனை படவாசிப்பில் உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்து உயிரினங்களுக்கும் வாழிடங்கள் உள்ளனவா? (பொது முடிவு அடைவதற்கான வினாக்கள்)

## மதிப்பீடு

- சரியான வழியைக் கண்டுபிடிக்க முடிந்தது.
- வாழ்விடங்களைப் புரிந்து கொண்டு கூற முடிந்தது.

## பயிற்சித்தாள் 14.2 – சிறியது முதல் பெரியது வரை

**வளர்ச்சி மண்டலம்** : அறிவு சார் வளர்ச்சி

**திறன்** : அளவுகளின் அடிப்படையில் நிபந்தனைகளுக்கு ஏற்ப படங்களை வகைப்படுத்தி ஒழுங்கு செய்ய இயல்கிறது (41).

**கருத்து** : பெரியதும் சிறியதுமான விலங்குகள் உள்ளன.

**கருவிகள்** : பசை, ஒட்டும் படங்கள், படங்கள்.

**சூழல்** : சொல்லிக் கேட்ட விலங்குக் கதைகள், குழந்தைகள் கூறும் செயல்பாடுகளுக்குப் பின்பு.

**செயல்முறை**

- கதைக்கூற்று : குட்டிக்கரடியின் பிறந்த நாளன்று வந்த விலங்குகளெல்லாம் புகைப்படம் எடுக்க நிற்கின்றனர். க்ளிக்கு குரங்குதான் புகைப்படம் எடுப்பவர். கேமராவுடன் குரங்கு அனைவரையும் பார்த்தது. பின்பு கூறியது. "அளவுக்கு ஏற்ப பெரியவர் முதல் சிறியவர் வரை வரிசையாக நிற்க வேண்டும்." அவர்கள் எவ்வாறு நின்றிருப்பார்கள்?
- **பயிற்சித்தாள் 14.2** – 'சிறியது முதல் பெரியது வரை' வழங்குதல்
- படவாசிப்பு
  - சிறியது யார்?
  - பெரியது யார்?
  - அளவுக்கு ஏற்ப அனைத்து உயிரினங்களையும் கண்டுபிடித்து குழந்தைகள் கூறுகிறார்கள்.
  - ஆசிரியரின் அறிவுறுத்தலின் படி அளவுகளுக்கு ஏற்ப பலூணிற்கு வண்ணம்

தீட்டுதல்.
பல்வேறு உயிரினங்களின் படங்களின் உதவியுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடல் வெளியிடலாம்.

- பாடல்

"பெரியவர் யார்? சிறியவர் யார்?
பெரிய யானை உண்டு – சிறிய முயலுண்டு
பெரியவர் யார்? சிறியவர் யார்?
பெரிய புலியுண்டு, சிறிய எலியுண்டு
பெரியவர் யார்? சிறியவர் யார்?
பெரிய பூனை உண்டு, சிறிய ஈ உண்டு

..........................................................................................

இவ்வாறு வரிகள் சேர்த்தும் பாடலாம்.

- ஆசிரியைக்கு : மிகவும் சிறியது – நீலநிறம், அதை விட பெரியது – பச்சை நிறம், அதைவிட பெரியது – மஞ்சள் நிறம், மிகவும் பெரியது – சிவப்பு, இவ்வாறு வண்ணம் தீட்ட அறிவுறுத்தலாம். குழந்தைகள் உயிரினங்களின் படங்களைத் திரட்டி வகைப்படுத்தி ஒட்டி வைக்கலாம்.

## மதிப்பீடு

| பெரிய உயிரினம் | சிறிய உயிரினம் |
|---|---|
| | |

- அளவுகளின் அடிப்படையில் பொருத்தமான வண்ணம் தீட்ட இயலுகிறது.

## பயிற்சித்தாள் – 14.3 "டோக்கன் வழங்கலாம்"

**வளர்ச்சிமண்டலம்** : அறிவு சார் வளர்ச்சி

**திறன்** : 1 முதல் 5 வரையுள்ள எண்களை எண்ணவும், எண்ணையும் பொருட்களின் எண்ணிக்கையையும் தொடர்புபடுத்த இயல்கிறது (44).

**கருத்து** : காட்டில் பல்வேறு விலங்குகள் வாழ்கின்றன.

**கருவிகள்** : ஸ்டார் ஸ்டிக்கர்கள்

**சூழல்** : மைதா மாவைப் பயன்படுத்தி உருவங்கள் செய்யும் செயல்பாட்டைத் தொடர்ந்து வெளியிடலாம்.

**செயல்முறை**

- கதைக்கூற்று : அன்பார்ந்த காட்டில் வாழும் நண்பர்களே! காடுகள் அனைத்தையும் அதிரச் செய்கின்ற காட்டுவிலங்குகள் அனைத்தையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகின்ற உயிருள்ள காட்சிகளுடன் இதோ வந்து சேர்ந்துள்ளது. உங்களது விருப்பமான **ஜங்கிள் சர்க்கஸ்.**
பார்த்தவர்களை மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் **ஜங்கிள் சர்க்கஸ்.** சர்க்கஸ் பார்க்க காட்டிலுள்ள அனைத்து விலங்கு நண்பர்களையும் நாங்கள் அழைக்கிறோம். வரவேற்கிறோம்.
(ஆசிரியர் அறிவிப்பு செய்வது போன்று வகுப்பில் வெளியிடுதல்)
திறந்த ஜீப்பின் மேலாக கழுத்தை நீட்டி ஒலிப்பெருக்கி வழியாக சத்தமாகக் கூறிய

ஒட்டகச் சிவிங்கியின் அறிவிப்பு காட்டு விலங்குகளை எல்லாம் உற்சாகப்படுத்தியது.

என்னென்ன வித்தைகள் சர்க்கஸில் காட்டுவார்கள்? (குழந்தைகளின் சுதந்திர பிரதி பலிப்பு) பீக்கு மயிலின் தோகை விரித்து ஆடும் நடனம்.

ஊஞ்சலிலிருந்து ஊஞ்சலுக்குத் தாவும் ஜம்பன் குரங்கு.

பொக்கன் யானையின் கிரிக்கட் விளையாட்டு.

தீ வளையத்திற்குள் குதிக்கும் லயணி சிங்கம்.

மரணக் கிணறில் மோட்டார் சைக்கிள் ஓட்டுகின்ற டைகி புலி.

இவ்வாறு என்னென்ன விளையாட்டுகள்.......

நுழைவாயிலில் டோக்கன் வழங்கத் தொடங்கினர்.

விலங்குகள் கூட்டம் கூட்டமாக

வரத்தொடங்கின.

குட்டிக்கரடிதான் விலங்குகளை எண்ணிப் பார்த்து சர்க்கஸ் பார்க்க உள்ளே அனுப்பியது.

யார் யாரெல்லாம் வந்திருப்பார்கள்?

(சுதந்திர பிரதிபலிப்பு)

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

- **பயிற்சித்தாள் 14.3** – “டோக்கன் வழங்கலாம்” கொடுத்தல்.

படவாசிப்பு : படத்தில் யார் யார்? எத்தனை பேர்?
ஒவ்வொரு கூட்டத்திலும் எத்தனை வீதம் டோக்கன் கிடைத்திருக்கும்?
ஸ்டார் ஸ்டிக்கர் எண்ணிக்கைக்கு சமமாக ஒட்டுதல்.


## மதிப்பீடு

- உயிரினங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சரியாக ஸ்டார்கள் ஒட்ட இயல்கிறது.

## மையக் கருத்து 15 மண், வேளாண்மை

உயிரினங்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படை மண் ஆகும். அதனால் மண்ணின் இயற்கைத் தன்மையை நிலை நிறுத்த வேண்டும். மண்ணிலுள்ள உயிரினங்கள், சுற்றுப்புறங்களிலுள்ள தாவரங்கள், சுற்றுப்புறத்திலுள்ள வேளாண்மைகள், வேளாண் கருவிகள் ஆகியவற்றைக் குறித்து குழந்தைகள் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

வகுப்பறைகளிலிருந்து கிடைக்கின்ற நேரடி அனுபவங்கள் வாயிலாக குழந்தைக்கு மண்ணோடும் வேளாண்மையுடனும் விருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் மையக் கருத்துப் பரிமாற்றம் அமைய வேண்டும்.




எளிமையானதும் இரசிக்கக் கூடியதுமான செயல்பாடுகள் கதைகள், பாடல்கள், உருவாக்க செயல்பாடுகள், புதிர்கள், பயிற்சித்தாள்கள் ஆகியவற்றின் வாயிலாக கடந்து செல்லும் போது இவற்றை நடமுறைப்படுத்த முடியும். மணல் தட்டின் வாய்ப்புகளைப் பயன்படுத்தியும் செடிகள் நட்டுவளர்த்துவதன் மூலமும் ICT வாய்ப்புகளை கருத்தில் கொண்டும் கூடுதல் அனுபவங்கள் வாயிலாக குழந்தையை கைப் பிடித்து நடத்திச் செல்ல நம்மால் முடியும்

### செயல்பாட்டு வரிசை

1. மண்ணைக் குழைக்கலாம், உருவங்கள் செய்யலாம்.

↓

2. பயிற்சித்தாள் 15.1 – “மண் அப்பம் செய்வோம்” – வழங்குதல்.

↓

3. மண்ணில் வரையலாம்.
   - மணல் தட்டு/நிலத்தில் மணலைப் பரப்பி படங்கள் வரையலாம்.
   - மணலில் குதிகாலை ஊன்றி வட்டம் வரையலாம்.

↓

4. பாட்டு பாடலாம் – ஏற்று பாடலாம்.

↓

5. பயிற்சித்தாள் 15.2 – மணல் படம் தயாரிக்கலாம். வழங்குதல்.

↓

6. செடிகள் நடலாம்

↓

7. மண்ணில் என்னென்ன?
   - கை லென்ஸ் பயன்படுத்தி உற்று நோக்கல்

↓

8. வேளாண்மைகள், வேளாண் கருவிகள் (படங்கள் காட்டுதல்)

↓

9. பயிற்சித்தாள் 15.3 “எம்மா...... எத்தனை?” – வழங்குதல்

↓

10. வேளாண்மையுடன் தொடர்புடைய கதைக் காட்சிகளைப் பட வடிவத்தில் கொடுத்து கதை கூறுதல்.

↓

11. பள்ளியில் ஒரு வேளாண் தோட்டம்.

## பயிற்சித்தாள் – 15.1 “மண் அப்பம் செய்வோம்”

| | | |
|---|---|---|
| **வளர்ச்சி மண்டலங்கள்** | • | அறிவு சார் வளர்ச்சி |
| **திறன்** | • | பொருட்களை ஒப்பீடு செய்வதற்கு கணித மொழியைப் பயன்படுத்த இயல்கிறது (39). |
| **கருவிகள்** | : | மண், சிரட்டை |
| **சூழல்** | : | ‘மண்ணப்பம்’ பாடல் பாடிய பின்பு மண்ணப்பம் செய்வோம் செயல்பாடு. |

**செயல்முறை**

• கதைக் கூற்று :

கோழி அம்மா குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு இரை தேடப்புறப்பட்டது. வழியில் வைத்து அவர்கள் சில குழந்தைகளைப் பார்த்தனர். அவர்கள் மண்ணப்பம் செய்து கொண்டிருந்தனர். மண்ணை எடுத்து சிரட்டையில் நிறைத்து அதைக் கவிழ்த்து. மண்ணப்பம் தயார் செய்கிறார்கள். கோழியும் குழந்தைகளும் அதனையே பார்த்துக் கொண்டு நின்றனர். சற்று நேரத்திற்குப் பின் குழந்தைகளை அவர்களின் அம்மா அழைத்தாள். ஆனாலும் குழந்தைகள் விளையாட்டை நிறுத்தவில்லை. சிரட்டை எடுக்கிறார்கள், மண்ணை நிறைக்கிறார்கள், சிரட்டையை கவிழ்க்கிறார்கள், மண்ணப்பம் தயாரிக்கிறார்கள். எவ்வளவு அழகு!

“மஞ்சு....... சிஞ்சு........ வாங்க.......” அம்மா மீண்டும் அழைத்தாள். குழந்தைகள் ஓடிச் சென்றார்கள். இந்த நேரத்தில் தாய்க்கோழியும் பிள்ளைகளும் மண் அப்பத்தின் அருகில் சென்றனர். கோழிக் குஞ்சுகள் கியோ..... கியோ எனக் கூறி மண்ணைக் கிளறின. மண்ணில் சிறு உயிரினங்கள் எங்கேயாவது உள்ளனவா?

ஹாவ்...... ஒன்று இரண்டு கரையான்கள் கிடைத்தன. தூரத்திலிருந்து குழந்தைகள் வருகின்ற சத்தம் கேட்டபோது தாய்க்கோழியும் பிள்ளைகளும் செடிகளுக்குப் பின்னால் ஓடின. ஒரு கோழிக் குஞ்சு சிரட்டையில் தட்டி விழுந்து அதற்குள்ளால் அகப்பட்டது.

குழந்தைகள் வந்து பார்த்தபோது ஒரு மண் அப்பமும் இல்லை.

இந்த வேலை செய்தது யார்? எவ்வளவு சிந்தித்தும் அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அப்போது ஒரு சத்தம்.

‘‘கியோ........ கியோ......’’ சிரட்டையின் அடியிலிருந்து தான் சத்தம் கேட்டது. குழந்தைகள் சிரட்டையை நிவர்த்தினார்கள்.

ஒரு கோழிக் குஞ்சு. அது பயந்து நடுங்கி நின்று கொண்டிருந்தது. மஞ்சு அதனை எடுக்கும் பொழுது அது அவளது கையில் எச்சம் இட்டது. ஐயே...... அவள் கையை உதறினாள்.

இந்த நேரத்தில் கோழிக்குஞ்சு ஓடி அம்மாவின் அருகில் சென்றது.

கோழிக் குஞ்சுகளும் மண்ணப்பம் செய்ய முடிவு செய்தன. சில மண்ணப்பங்களைச் செய்த போதே சோர்ந்து விட்டன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மண்ணப்பம் வேண்டும். உதவலாமா?

- **பயிற்சித்தாள் 15.1** – 'மண்ணப்பம் செய்வோம்' வழங்குதல்
- படவாசிப்பு
  - கோழிக் குஞ்சுகள் எத்தனை?
  - மண்ணப்பம் எத்தனை?
  - எத்தனை கோழிக் குஞ்சுகளுக்கு மண்ணப்பம் தேவை?
  - பொருத்திப் பார்த்தபின்பு வரைந்து இணைத்தல்
  - கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மண்ணப்பம் வரைதல்.
- மண்ணப்பம் செய்தல்

உங்களுக்கு மண்ணப்பம் செய்ய வேண்டுமா? குழந்தைகள் அனைவரும் மண்ணப்பம் செய்கிறார்கள் (பெரிய சிரட்டைகளும் சிறிய சிரட்டைகளும் வழங்க வேண்டும்)

"பெரிய மண்ணப்பமா! சிறிய மண்ணப்பமா! கூடுதல்?

பொருத்திப் பார்க்கிறார்கள். மணலைப் பயன்படுத்தியும், மண்ணைப் பயன்படுத்தியும் மண்ணப்பம் செய்து பார்க்கட்டும்....... "வேறுபாடு என்ன?" அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். தொடர்ந்து அனைவரும் சோப்பை பயன்படுத்தி கைகளைக் கழுவ வேண்டும்.

ஆசிரியைக்கு : குழந்தைகள் கணித மொழியில் ஒப்பீடு செய்து கூற வேண்டும். (...... விடக் கூடுதல், .......... விடப் பெரியது, சிறியது, ஒரே அளவு, சம அளவு, ஒவ்வொன்று வீதம், ஏராளம், நிறைய, கீழே உள்ளது. ஒரே வரிசையிலுள்ளவை என இவ்வாறு கூற உதவும் கேள்விகள்/ அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டும்).

## மதிப்பீடு

- ஒவ்வொரு கோழிக் குஞ்சிற்கும் ஒவ்வொரு மண்ணப்பம். வரைந்து இணைத்தல்.
- கோழிக் குஞ்சுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் எண்ணிக்கையிலான மண்ணப்பம் வரைய இயல்கிறது.

## பயிற்சித்தாள் 15. 2 – 'மணல் படம் தயாரிக்கலாம்'

**வளர்ச்சி மண்டலங்கள்**
- உடல் இயக்க வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்கள்**
1. பென்சில்/கிரையான் பயன்படுத்தி படங்களுக்கு வண்ணம் தீட்டுதல் (5).
2. இயற்கையை இரசிப்பதற்கும் படத்தின் மூலம் வெளியிடவும், வண்ணம் தீட்டவும் இயல்கிறது (80).

**கருத்து** • செடிகள் வளர்வது மண்ணில்தான்.

**சூழல்** • மண் மேட்டில் கட்அவுட்டு செடிகள் நடலாம் என்ற செயல்பாட்டிற்குப் பின்பு

**செயல்முறை**

**பயிற்சித்தாள் 15.2** – 'மணல் படம் தயாரிக்கலாம்' வழங்குதல்

படத்தில் உள்ள செடிக்கு மட்டுமே வண்ணம் தீட்ட வேண்டியுள்ளது. அடிப்பகுதியில் வேரிற்கு மேலாக பசை தேய்த்து மண்ணைத் தூவலாம். மண்ணில் செடி முளைத்து வருகின்ற முறையில் பயிற்சித்தாள் முழுமையாக்க பொருத்தமான உதவி வழங்க வேண்டும்.

ஆசிரியைக்கு — செடியின் வேர்கள் மண்ணிற்கு அடியில் என குழந்தைகள் சொல்ல வேண்டும். சிறிய செடியைப் பிடுங்கிப் பார்த்து வேரின் சிறப்புகளை உற்று நோக்க வாய்ப்பு வழங்க வேண்டும்.

## மதிப்பீடு

- வேர் மண்ணிற்கு அடியில் உள்ளவாறு படத்தை முழுமையாக்க இயல்கிறது.
- செடிக்குப் பொருத்தமான வண்ணம் தீட்ட இயல்கிறது.

## பயிற்சித்தாள் 15. 3 – எம்மா.............. எத்தனை?

**வளர்ச்சி மண்டலம்** : அறிவுசார் வளர்ச்சி

**திறன்கள்**
1. 1 முதல் 5 வரையுள்ள எண்களை எண்ணவும் எண்களையும் பொருட்களின் எண்ணிக்கையையும் தொடர்பு படுத்தவும் இயல்கிறது (44).
2. அனுபவத்தின் பின்துணையோடு முடிவுகளை வெளியிட இயல்கிறது (31).

**கருத்து** • மனிதர்கள் பல்வேறு வகையான வேளாண்மைகள் செய்கின்றனர்.

**சூழல்** • வேளாண்மைகள், வேளாண் கருவிகள் ஆகியவற்றின் படக் காட்சிக்குப் பின்.

**செயல்முறை**

- கதைக்கூற்று

நாட்டில் தென்னைமரம் ஏறுவதற்கு இப்போது ஒருவரே உள்ளார். அதுயார் தெரியுமா? குரங்கண்ணன் தான்.
தென்னையில் ஏறவேண்டும்.
தேங்காய் பறிக்க வேண்டும்.
சட சட என்று நடக்க வேண்டும்.
இவைகள் தான் குரங்கண்ணனின் வேலை.
ஒரு முறை குரங்கண்ணன் ஒரு தென்னையில் ஏறியது. தேங்காய் ஒவ்வொன்றாகப் பறித்துப் போடத் தொடங்கியது. ஒன்று...... இரண்டு..... மூன்று..... நான்கு...... எத்தனை தேங்காய்கள் குரங்கண்ணன் பறித்திருப்பார்?

- பயிற்சித்தாள் 15.3 – 'எம்மா........ எத்தனை?' வழங்குதல்.
- படவாசிப்பு
  - எத்தனை தேங்காய் தரையில் உள்ளது?
  - கீழே விழுந்தது எத்தனை?
  - எண்ணிக் கூற வாய்ப்பு வழங்குதல்.
  - தேங்காய்களுக்கு வண்ணம் தீட்டுதல்.
- கதைக்கூற்று (தொடர்ச்சி)

அடடா....... தேங்காய்க் குலையை மொத்தமாகப்

பறிப்பதல்லவா இதை விட நல்லது. குரங்கிற்கு இவ்வாறு தோன்றியது. பின்பு சிறிதும் தாமதிக்காமல் குலையை மொத்தமாகப் பறிக்க முயன்றது.

பலமாக இழுத்தது - ஹம்பம்பா.......

இரு கைகளாலும் இழுத்தது - ஹம்பம்பா....

குலை அசையவில்லை.

குலையில் தூங்கிக் கிடந்தது - ஹம்பம்பா......

ஆடி ஆடி இழுத்தது - ஹம்பம்பா......

இறுதியில் அது நிகழ்ந்தது!

ஸ் ஸ் ஸ் ப்பும்.......

குரங்கு இடுப்பு இடிக்க கீழே விழுந்தது.

இடுப்பு ஒடிந்தது. பாவம்.

மேல் நோக்கிப் பார்த்தது.

அதோ தேங்காய்க் குலை அடர்ந்து.

கீழே கீழே வருகிறது.

புரண்டு மாறியது குரங்கு

உருண்டு மாறியது குரங்கு

ஊர்ந்து மாறியது குரங்கு

தேங்காய் குலை நேராக வாலில் விழுந்தது.

வால் நசுங்கி நசுங்கி சட்டினியானது.

“ங்கீ ங்கீ ங்கீ - குரங்கு சத்தமாக அழுதது. உயரத்திலிருந்து விழுந்த குரங்கிற்கு காயம் ஏற்பட்டது. ஆனால் தேங்காய்க்கு என்ன நடந்திருக்கும்? (குழந்தைகளின் பிரதிபலிப்பு) தேங்காய் உடைந்து சிதறாமல் இருந்தது எதனால்?

ஆசிரியைக்கு


- தேங்காயை உரித்துத் தொண்டினையும் சகிரியையும் காட்டுதல், தொண்டு காம்பைப் பாதுகாக்கிறது என்ற கருத்தை அறிமுகப் படுத்தலாம் (முன்னரே தயார் செய்யலாம்)
- பயிற்சித்தாள் செயல்பாட்டிற்குப் பின் விழுகின்ற தேங்காய்கள், கீழே உள்ள தேங்காய்கள் ஆகியவற்றுக்கு சமமான எண்ணிக்கையிலுள்ள கற்கள்/மஞ்சாடிகள் ஆகியவற்றை இணைத்து வரிசைப் படுத்துவதற்கான செயல்பாடு வழங்கலாம்.

## மதிப்பீடு

- எண்ணிக் கூற இயல்கிறது.

# மையக் கருத்து 16 தொழில்

பல்வேறு தொழில்கள் உள்ளன எனவும் தொழில் செய்ய பல்வேறு கருவிகள் வேண்டுமெனவும் குழந்தைகள் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. தொழிலின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவும் அனைத்து தொழிலும் மகத்தானது என அறிந்து கொள்ளவும் இந்த மையக் கருத்தின் வாயிலாக வாய்ப்பை ஏற்படுத்தலாம்.




## செயல்பாட்டு வரிசை

1. காகிதப் படகு உருவாக்குதல்.

↓

2. வஞ்சிப்பாடல்

↓

3. காகிதம், துணி ஆகியவற்றைப் பயன்படுத்திச் செய்யும் உருவாக்கச் செயல்பாடுகள்.

↓

4. வீட்டு வேலைகள், தொழில், தொழிற்கருவிகள் (சுதந்திரப் பேச்சு).

↓

5. பயிற்சித்தாள் 16.1 – “நூல் ஒட்டி வலை உருவாக்கலாம்” வழங்குதல்.

↓

6. தொழிற் பாடல் (எகா: உங்களது நாட்டில் எல்லாம் என்ன வேலையடா....)

↓

7. பயிற்சித்தாள் 16.2 – ”தொழில் இடம் எது?” வழங்குதல்

↓

8. விளையாட்டுக் கருவிகள் உருவாக்கலாம் (தீப்பெட்டி, கார்ட்போர்ட்)

↓

9. வீட்டிலுள்ள தொழிற் கருவிகள் – படத்தொகுப்பு உருவாக்குதல்.

↓

10. கருவிகள் – மாதிரி உருவாக்கம் (மைதா/களிமண்)

↓

11. கருவிகள் – பயன்படுத்துதல்
(ஸ்டாப்லர், எலுமிச்சை பிழியும் கருவி, இடுக்கி – பாத்திரம் இறக்கப் பயன்படுத்தும் கருவி, பஞ்சிங் மெஷின்) போன்றவை.

## பயிற்சித்தாள் – 16.1 "நூல் ஒட்டி வலை உருவாக்கலாம்"

**வளர்ச்சி மண்டலங்கள்**
- படைப்பாற்றல் வளர்ச்சி

**திறன்**
- பொருட்கள் (இயற்கையிலிருந்து கிடைப்பவை, கழிவுப் பொருட்கள்) பயன்படுத்தி விளையாட்டுப் பொருட்கள், வியப்பை உருவாக்கும் பொருட்கள், கொளாஷ் ஆகியவற்றின் உருவாக்கச் செயல்பாடுகளில் ஈடுபட இயல்கிறது (84).

**கருத்து**
- பலதரப்பட்ட தொழில்கள் செய்வோர் நமது நாட்டில் உள்ளனர்.

**கருவிகள்**
- பயிற்சித்தாள், நூல், பசை

**செயல்முறை**

- கதைக்கூற்று

குளத்தில் மீன்கள் நீந்துகின்றன. பலவகை மீன்கள். குளத்தின் கரையில் ராமு பட்டத்தைப் பறக்க விட்டுக் கொண்டிருந்தான்.
பட்டம் பறந்து உயர்ந்தது. பறந்து வந்த காகம் பட்டத்தை அறுத்தது.
அறுந்த பட்டம் சுற்றிப் புரண்டு குளத்தில் விழுந்தது. மீன்கள் அதைப் பார்த்தன.
ராமுவின் கையில் நூல் மட்டும் இருந்தது.
ராமு நூலை குளத்தில் எறிந்தான்.
மீன்கள் நூலில் சுற்றி விளையாடத் தொடங்கின. ஒரு மீன் நூலின் ஒரு முனையைக் கடித்து இழுத்து நீந்தியது. வேறொரு மீன் அதன் குறுக்காக நீந்தியது. மீன்கள் அனைத்தும் நூலில் சுற்றிச் சுற்றி விளையாடின.
மீன்கள் நூலில் அகப்பட்டு அசைய முடியாமல் தவித்தன,
''ராமு, ராமு காப்பாற்றுவாயா?'' மீன்கள் அழுதன.
ராமு குளத்தின் கரையில் சென்று நூலின் முனையைப் பிடித்து இழுத்தான்.
மீன்கள் அனைத்தும் கரைக்கு வந்தன. ராமு ஒவ்வொன்றையும் எடுத்து நூல் பின்னலை அவிழ்த்து தண்ணீரில் விட்டான். இவை அனைத்தையும் ஒரு குரங்கு மரக்கிளையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தது. மறுநாள் குரங்கு நூலால் வலை பின்னியது. மீன்கள் அனைத்தையும் பிடித்துத் தின்றது. குரங்கு எவ்வாறு வலை பின்னியது? நாமும் வலை பின்னுவோம்.

பயிற்சித்தாள் 16.1 – 'நூல் ஒட்டி வலை உருவாக்கலாம்' வழங்குதல்.

- படத்தில் உள்ள வலைக் கோடுகள் வழியாக பசை தேய்த்தல்.
- நூல் வெட்டி எடுத்தல்
- கோடுகள் வழியாக நூலை ஒட்டி வலையாக்குதல்.
- மேலும் அதிகமான நூல்கள் நேராகவும் குறுக்காகவும் வலையின் பிற பகுதிகளில் வரைந்து சேர்த்தல்.

## மதிப்பீடு

- தொழிற் கருவிகளைப் புரிந்து கொள்ள முடிந்தது.
- நூல் ஒட்ட முடிந்தது.

## பயிற்சித்தாள் 16.2 – தொழில் இடம் எது?

**வளர்ச்சி மண்டலங்கள்**
- மொழி வளர்ச்சி
- அறிவு சார் வளர்ச்சி

**திறன்கள்**
1. படங்கள், பொருட்கள் ஆகியவற்றைப் பார்த்து கருத்துகள் கூற இயல்கிறது (14).
2. கண்டறிதல் செயல்பாடுகளில் ஈடுபடவும் அனுபவத்தின் துணையோடு முடிவுகள் வெளியிடவும் இயல்கிறது (31).

**கருத்து**
- பல்வேறு தொழில் செய்வோர் நமது நாட்டில் உள்ளனர்.

**சூழல்**
- தொழிற் பாடலுக்குப் பின். (எகா: உங்களது நாட்டில் எல்லாம் என்ன வேலையடா.....)

**கருவிகள்**
- பயிற்சித்தாள்

**செயல்முறை**
- குழந்தைகளுடன் ஆசிரியர், தொழிலைக் குறித்தும் தொழில் இடங்களைக் குறித்தும் பேசுதல்.

**பயிற்சித்தாள் 16.2** "தொழிலிடம் எது?" வழங்குதல்

படவாசிப்பு
- படத்தில் என்னென்ன?
- ஒவ்வொரு படத்திலுள்ள வேலைக் காரர்களையும் அவர்களின் தொழில் இடத்தையும் இணைத்தல்.
- வாய் மொழியாக விளக்குதல்.

கண்டறிதல் செயல்பாடு
- இதுபோல் வேறொரு தொழிலுடன் தொடர்புடைய கருவிகயையும் தொழிலையும் கூறலாமா?

## மதிப்பீடு

- படத்திலுள்ள காரியங்களைக் குறித்து கூற இயல்கிறது.
- சரியாக இணைத்து வரைய இயல்கிறது.

# மையக் கருத்து 17 குழந்தைகள் தினம்

குழந்தைகளின் அன்பான நண்பன் தான் நேரு மாமா. நேருவின் குழந்தைப் பருவ அனுபவங்களை எளிமையாகக் கதை வடிவில் கூறுவது குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும்.

நேரு மாமாவின் உடை, ரோஜாப் பூவை விரும்ப ஏற்பட்ட சூழல் ஆகியவற்றை பல்வேறு செயல்பாடுகள் வாயிலாக இங்கு வெளியிடலாம். கதைகள் கேட்டு இரசிப்பதுடன் நண்பர்களிடம் அன்பு காட்டுவதற்கான மனப்பாங்கும் குழந்தைகளிடம் உருவாக வேண்டும். நேரு மாமாவின் பிறந்த நாள் கொண்டாட்டச் செயல்பாடுகளில் பங்கேற்பதன் வாயிலாக நண்பர்கள் ஆவதற்கும் பொறுப்புடன் நடந்து கொள்வதற்குமான வாய்ப்பை உறுதி செய்யவும் முயற்சி செய்ய வேண்டும்.




## செயல்பாட்டு வரிசை

1. குழந்தைகள் தினத்துடன் தொடர்புடைய பாடல்

↓

2. பயிற்சித்தாள் 17.1 – ரோஜாப் பூவிற்கு வண்ணம் தீட்டுங்கள்!

↓

3. தோரணங்கள் தயார் செய்தல்

↓

4. அலங்கரித்தல்

## பயிற்சித்தாள் – 17.1 ரோஜாப் பூவிற்கு வண்ணம் தீட்டுங்கள்

**வளர்ச்சி மண்டலங்கள்** • உடல் இயக்க வளர்ச்சி

**திறன்** • சுதந்திரமாக படங்களுக்கு வண்ணம் தீட்ட இயல்கிறது (5).

**கருத்து** • குழந்தைகள் தினத்துடன் தொடர்புடைய பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்துவதுண்டு.

**கருவிகள்** • கிரையான்ஸ் (மஞ்சள், சிவப்பு, ஆரஞ்சு)

**சூழல்** • குழந்தைகள் தினத்துடன் தொடர்புடைய பாடலுக்குப் பின்பு.

**செயல்முறை**

- கதைக் கூற்று : வீட்டு முற்றத்திலுள்ள ரோஜாச் செடி கூறியது. “தெரியாதா! நாளை குழந்தைகள் தினமாகும். குழந்தைகளே அன்பான நேரு மாமாவின் பிறந்த நாள்”

"அது உனக்கு எவ்வாறு தெரியும்" - லல்லு கேட்டான்.

"நான் அல்லவா நேரு மாமாவின் கோட்டு பாக்கட்டின் மேல் இருக்கும் பூ"

"ஏன் நீ அங்கு இருக்கிறாய்?"

"ஒவ்வொரு நாளும் நேருமாமா வெளியே செல்லும் போது ஒரு ரோஜாப் பூவைப் பறித்து கோட்டின் மேலுள்ள பாக்கட்டில் வைப்பார்."

''எனக்கும் அவ்வாறு வைக்க வேண்டும்'' லல்லு கூறினான்.

"வைத்துக்கொள். இன்று விரிந்த பூ. நீ பறித்துக் கொள். பின்பு நேருமாமா போல் வேடமிட்டு குழந்தைகள் தின ஊர்வலத்திலும் போக வேண்டும்....."

லல்லுவிற்கு மகிழ்ச்சியானது. நேரு மாமாவாக வேடமிட அவன் ஓடிச் சென்றான். ரோஜாப் பூவிற்கும் மகிழ்ச்சியானது. நேருமாமாவின் ரோஜாப் பூவாக இருப்பேனல்லவா!

கோட்டிலுள்ள ரோஜாப் பூவைப் பார்க்க வேண்டாமா?

**பயிற்சித்தாள் 17. 1** – "ரோஜாப் பூவிற்கு வண்ணம் தீட்டுங்கள்." வழங்குதல்.

படத்தைப் பார்த்தீர்களா?

இனி படத்திலுள்ள ரோஜாப் பூவிற்கு வண்ணம் தீட்டலாம்.

பலவகையில் வண்ணம் தீட்டுவதற்கான முறைகளைப் பயிற்றுவிக்கலாம்.

- மஞ்சள் மற்றும் சிவப்பு கலந்து வண்ணம் தீட்டுதல்.
- சிவப்பும் ஆரஞ்சும் கலந்து வண்ணம் தீட்டுதல்.
- சில இடங்களில் அடர்த்தியாகவும் சில இடங்களில் அடர்த்தி குறைத்தும் வண்ணம் தீட்டுதல்.
- ஒவ்வொரு அடுக்கும் வேறுபடுத்தி அறியும் படி ஒவ்வொன்றிற்கும் தனித்தனி நிறம் கொடுத்தல் முதலானவை.

## மதிப்பீடு

- பொருத்தமான வண்ணம் தீட்ட இயல்கிறது.

## மையக் கருத்து 18 பறவைகள்

வண்ணச் சிறகுகள் விரித்து பறந்து செல்லும் பறவைகள் குழந்தைகளுக்கு என்றும் வியப்பைத் தருவன ஆகும். தங்களது அனுபவத்தில் குழந்தைகள் ஏராளம் பறவைகளைப் பார்த்துள்ளனர். வடிவிலும், அளவிலும், குரலிலும் பறவைகள் வேறுபட்டவை ஆகும். வீட்டில் வளர்க்கும் பறவைகளும் உள்ளன. பறவைகளால் பல பயன்கள் உள்ளன எனக் குழந்தைகள் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. படம் வரைதல், எளிய உருவாக்கச் செயல்பாடுகள், கதைகள், பாடல்கள், புதிர்கள் ஆகிய செயல்பாடுகள் மூலமாக ஏராளமான நேரடி அறிவுகள் குழந்தைகளுக்குக் கிடைக்கும். அதன் வாயிலாக இயற்கையை நேசிக்கவும் உயிரினங்களைப் பாதுகாப்பதற்குமான மனப்பாங்கை வளரச் செய்ய நம்மால் இயலும்.

### செயல்பாட்டு வரிசை

1. பாடல் (காகத்திற்கு உண்டு ஒரு சட்டை)

↓

2. விளையாட்டு – பறவைகளின் பெயர் கூறும் விளையாட்டு – (பாற்றேண் விளையாட்டு)

↓

3. 'குளம், கரை, ஆகாயம்' விளையாட்டு

↓

4. பயிற்சித்தாள் 18.1 – “யாருடைய வால்?” வழங்குதல்

↓

5. பறவைகளின் சத்தத்தைப் போலச் செய்தல் (பறவைகள்)

↓

6. கதை ICT (ஆமையோடு பறந்த கொக்குகள்)

↓

7. கதை (எறும்பைப் பாதுகாத்த புறா)

↓

8. பெருமை பேசுதல்

### பயிற்சித்தாள் – 18.1 யாருடைய வால்?

**வளர்ச்சி மண்டலங்கள்** • அறிவுசார் வளர்ச்சி

**திறன்** • ஐம்புலன்களைப் பயன்படுத்தி உயிரினங்களை உற்றுநோக்கி சிறப்புகளைக் கண்டறியவும் வாய்மொழியாக வெளியிடவும் இயல்கிறது. (நிறம், அளவு, வடிவம், குரல்.....) (30).

**கருத்து** • நம்மைச் சுற்றி பலவகைப் பறவைகள் உள்ளன.

**கருவிகள்** • கிரையான்ஸ்

**சூழல்** • பாற்றேண் விளையாட்டிற்குப் பின்

**செயல்முறை**

விளையாட்டு • ‘குளம், கரை, ஆகாயம்’ விளையாட்டு. குளத்திலுள்ள உயிரினத்தின் பெயர் ஆசிரியர் கூறும்போது குழந்தைகள் கைகளைக் கீழே இடவேண்டும்.
கரையிலுள்ள உயிரினத்தின் பெயர் கூறும்போது கைகளை நேராக நீட்ட வேண்டும்.
ஆகாயத்தில் பறக்கும் உயிரினங்களின் பெயர் கூறும் போது கைகளை மேல் நோக்கி உயர்த்த வேண்டும்.
வேகமாகவும் வரிசை தவறாகவும் கூறி ரசிக்கும்படியாக்க வேண்டும்.

- கலந்துரையாடல் : பறவைகளின் சிறப்புகள் என்னென்ன?
- கதை கூற்று
  - ஒரு கதை கூறட்டுமா........

கவனித்துக் கேட்க வேண்டும்.

பண்டு, பண்டு, பண்டு.... பண்டைய காலத்தில் தான் இந்தக் கதை நடந்தது. அன்று சேவல் கோழிகளுக்கு எல்லாம் அழகான பெரிய நீளமான வால் இருந்தது.

''எங்களுக்கு இதைப் போன்ற ஒரு வால் இல்லையே'' பிற பறவைகள் எல்லாம் வருந்தின.

அவ்வாறு இருக்க ஒரு நாள் மயில்களுக்கு ஒரு கருத்து தோன்றியது.

''எங்களுக்கு உங்களது இறகு ஒன்றைக் கடனாகத் தருவீர்களா?'' மயில்கள் சேவல் கோழிகளிடம் கேட்டன.

''ஒரு திருமணத்திற்குப் போகத்தான் மாலையில் திரும்பத் தருகிறோம்.'' மயில்கள் தாழ்மையுடன் கேட்டன. சேவல் கோழிகள் அதை நம்பின. அவை வாலில் உள்ள இறகைக் கழற்றி மயில்களுக்குக் கொடுத்தன.

அவ்வாறு மயில்கள் அதனை வைத்துக் கொண்டு அப்போதே நாட்டை விட்டுச் சென்றன.

எங்கோ போயின?

மலை இறங்கி, குன்று இறங்கி, கணவாய் இறங்கி எங்கேயோ ஓடிப்போயின. நாட்டை விட்டுபோன பின்பு மயில்கள் அந்த வால் இறகை கோழிகளுக்கு கொடுக்கவே இல்லை.

பாவம் கோழிகள்.... அவை என்றும் காலையில் கூட்டிலிருந்து கொக்கரக்கோ..... கோ. எங்களது வாலைக் கொண்டு தா......

கொக்கரக்கோ கோ.... மயிலே மயிலே விரைந்து வா........

கொக்கரக்கோ கோ...... எங்களது வாலைத் திருப்பித்தா..... என கூவி அழைக்கும்.

காலம் பல கடந்தது. இதுவரை மயில்கள் சேவல் கோழிகளுக்கு வாலைத் திரும்பத் தரவேயில்லை. அனைத்துப் பறவைகளுடைய வாலும் ஒரே போல் உள்ளதா?

சுதந்திர பிரதிபலிப்பு

பயிற்சித்தாள் 18.1 – 'யாருடைய வால்?' வழங்குதல்

படவாசிப்பு
- படத்தில் என்னென்ன பறவைகள் உள்ளன?
- ஒவ்வொரு பறவையின் வால்களையும் அந்தந்த பறவைகளுக்குப் பொருந்துமாறு வரைந்து இணைத்தல்.
- ஒவ்வொரு பறவையைக் குறித்தும் கூறுதல். (நிறம், அளவு, ஒலி, வடிவம்)

## மதிப்பீடு

- ஒவ்வொரு பறவையினுடையவும் வால்களை வரைந்து இணைக்க இயல்கிறது.
- பறவைகளை உற்றுநோக்கி சிறப்புகள் கண்டறிதல். வாய்மொழியாகக் கூறுதல்.

## மையக் கருத்து 19 பிராணிகள், ஊர்வன

சுற்றுப்புறத்திலுள்ள பிராணிகளின் சிறப்புகளைக் குழந்தைகள் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. தனது வீட்டிற்குள்ளும் வெளியேயும் உள்ள பிராணிகளையும் ஊர்வனவற்றையும் குழந்தைகள் வியப்புடன் பார்க்கின்றனர்.

பிராணிகளும் ஊர்வனவும் கதாப் பாத்திரங்களாக வருகின்ற கதைகள் வாயிலாகவும் பாடல்கள் வாயிலாகவும் பிற செயல்பாடுகள் வாயிலாகவும் அவற்றின் சிறப்புகளை குழந்தை புரிந்து கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும். பிற உயிரினங்களிடம் நல்ல மனப்பாங்கு உருவாவதற்கான செயல்பாடுகளையும் வழங்க வேண்டும்.

### செயல்பாட்டு வரிசை

1. எறும்பின் பாடல் (வரி வரியாய்........).

↓

2. பாடல் – சிறு பிராணிகள் (பக்கம் – 213, 214).

↓

3. இயற்கையை ரசித்து நடத்தல். (சிறப்புகள் கூறுதல்)

↓

4. காணொளி (பிராணிகள், ஊர்வன)

↓

5. எறும்பின் கதை.

↓

6. பயிற்சித்தாள் 19.1 – நண்பர்களைக் கண்டுபிடியுங்கள் வழங்குதல்.

↓

7. வண்ணத்துப் பூச்சியின் பாடல். (விளையாட்டுப் பொம்மை பக்கம் – 207)

↓

8. கதைக் கூற்று.

↓

9. பயிற்சித்தாள் 19.2 – “நான் யார்?” வழங்குதல்.

↓

10. கொளாஷ் உருவாக்குதல்.

↓

11. பிராணிகள் எறும்புகள் – அனுபவம் கூறுதல்.

↓

12. கணித விளையாட்டு. (விளையாட்டுப் பொம்மை பக்கம் – 235)

↓

13. பிராணிகளின் படங்கள் திரட்டுதல் – ஒட்டுதல் – படத்தொகுப்பு தயாராக்குதல்.

### பயிற்சித்தாள் – 19.1 – நண்பர்களைக் கண்டுபிடியுங்கள்

**வளர்ச்சி மண்டலங்கள்**
- அறிவுசார் வளர்ச்சி
- படைப்பு மற்றும் அழகியல் மேம்பாடு

**திறன்**
- பிராணிகள், ஊர்வன ஆகியவற்றைப் புரிந்து கொள்ளவும் சிறப்புகளைக் கண்டறிந்து விளக்கவும் வாழ்விடங்களைத் தெரிந்து கொண்டு கூறவும் இயல்கிறது (34).

**கருத்து**
- வீட்டிற்குள்ளேயும் வெளியேயும் ஏராளம் பிராணிகள் உள்ளன. அவற்றின் பெயர்களைத் தெரிந்து கொள்ளுதல்.

**கருவிகள்**
- பயிற்சித்தாள், கிரையான்ஸ், காணொளி

**சூழல்**
- சிறு பிராணிகள் (விளையாட்டுப் பொம்மை பக்கம் 213, 214)

  என்ற பாடலை ஆசிரியரும் குழந்தைகளும் பாடுதல்.

- இயற்கையை ரசித்து நடத்தல் (சிறு பிராணிகளைப் பார்க்க வாய்ப்புள்ள இடத்தை ஆசிரியர் முன்னரே முடிவு செய்ய வேண்டும்.
- பார்க்கக் கூடிய பிராணிகளைக் குறித்துக் கேள்விகள் தயார் செய்திருக்க வேண்டும்.
  எகா: பிராணிகளின் நிறம், கால்கள் போன்றன.
- பிராணிகளுடன் தொடர்புடைய தனது அனுபவம் (எறும்பு கடித்தல்) கூறுதல்.
- காணொளி – (பிராணிகள், ஊர்வன) பார்த்த பிராணிகளைக் குறித்து குழந்தைகள் கூறட்டும்.

**செயல்முறை**

**பயிற்சித்தாள் 19.1** – “நண்பர்களைக் கண்டுபிடியுங்கள்”, வழங்குதல்

| | |
|---|---|
| • படவாசிப்பு | • படத்தில் யார் யார்?<br>• இவர்கள் ஒவ்வொருவருக்கும் நண்பர்கள் உள்ளனர். கண்டுபிடிக்கலாமா?<br>• நண்பர்களுடன் வரைந்து இணைத்து வண்ணம் தீட்டுதல்.<br>• வாழ்விடங்கள் கலந்துரையாடுதல் (பச்சை விட்டில் தொடர்புடைய கதைப் புத்தகத்தை வாசித்துக் கேட்கச் செய்யலாம்.) |

## மதிப்பீடு

- பிராணிகளின் பெயர் கூறுதல்.
- நண்பர்களைக் கண்டுபிடித்து வண்ணம் தீட்ட இயல்கிறது.

## பயிற்சித்தாள் 19.2 – நான் யார்?

| | |
|---|---|
| வளர்ச்சி மண்டலம் | • அறிவு சார் வளர்ச்சி |
| திறன் | • பொருட்கள்/படங்கள் உற்று நோக்கி குழுவில் சேராததை வேறுபடுத்திக் கண்டறிந்து கூறவும் காரணம் சொல்லவும் இயல்கிறது (33). |
| கருத்து | • வடிவத்திலும், நிறத்திலும், அளவிலும் பிராணிகளுக்கும் ஊர்வனவற்றிற்கும் வேறுபாடுகள் உள்ளன. |
| கருவிகள் | • பயிற்சித்தாள், கிரையான்ஸ் |
| சூழல் | • உயிரினங்களின் சிறப்புகளை உட்கொள்ளும் கதைக் கூற்றிற்குப் பின். |
| • கதைக் கூற்று | • சீனு எறும்பிற்கு ஒரு ஆசை..... “நாட்டை ஒரு முறை சுற்றிப் பார்க்க வேண்டும்.'' அம்மாவிடம் கேட்டது.<br>“மகனே சீக்கிரம் வரவேண்டும்..... கவனமாக போ” அம்மா கூறினாள்.<br>சீனு எறும்பு வெளியே சென்றது.<br>அதோ வருகிறது கண்ணன் ஓணான்!<br>“கண்ணா நீ எங்கு போகிறாய்?”<br>கண்ணன் கூறியது; “நாட்டைச் சுற்றிப்பார்க்க வேண்டும்” நானும் வருகிறேன்” சீனு எறும்பு நடந்தது. ஓணான் பின்னால் சென்றது. “சீனு நீ நடக்க வேண்டாம் எனது முதுகில் ஏறி உட்கார்” கண்ணன் ஓணான் கூறியது. சீனு எறும்புக்கு மகிழ்ச்சி. அவர்கள் நடந்தனர்.<br>“உனது முதுகில் இருந்து பயணம் செய்வது |

எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது! உனது வாலிற்கு எவ்வளவு நீளம்.... உருண்ட கண்ணும்...." சீனு எறும்பு கூறியது. "எனக்கு... நிறம் மாறவும் இயலும்'' ஓணான் சிரித்துக் கொண்டே கூறியது. சீனு எறும்பிற்கு நம்பிக்கை வரவில்லை. "நீ கீழே இறங்கு....."

"அய்யோ, கண்ணா நீ எங்கே?" சீனு எறும்பு சுற்றிலும் பார்த்தது.

"நான் இங்கே இருக்கிறேன்...."

ஓணான் இலைகளுக்கு அடியிலிருந்து சத்தமாகக் கூறியது.

சீனு எறும்பு பச்சை இலைகளின் கூட்டத்தில் பார்த்தது.

அங்கு ஒரு அசைவைப் பார்த்தது. கண்ணன் ஓணான் பச்சை நிறத்தில்.......

கண்ணன் இறங்கிவருவதைச் சீனு எறும்பு ஆச்சரியத்துடன் பார்த்தது.

கண்ணனின் மீது ஏறிச் சீனு எறும்பு பயணத்தைத் தொடர்ந்தது.

அவர்களுடன் மேலும் சிலர் சேர்ந்தனர்.

யார் யாரென நாம் பார்ப்போம்.

**பயிற்சித்தாள்** 19.2 – நான் யார்? வழங்குதல்.

- படவாசிப்பு
  - சீனு எறும்புடன் பயணம் செய்தவர்கள் யார் யார்?
  - கொசுவிற்கு என்னவெல்லாம் சொல்லுவதற்கு இருக்கும்?
  - பச்சை விட்டிலுக்கு என்னென்ன கூறுவதற்கு இருக்கும்?
  - வண்ணத்து பூச்சிக்கு என்னவெல்லாம் சொல்லுவதற்கு இருக்கும்.
  - பாம்பிற்கு என்னென்ன கூறுவதற்கு இருக்கும்?

  ஒவ்வொரு உயிரினமாக சுயமாக கற்பனை செய்து சிறப்புகள் கூறுதல்.

  சீனு எறும்பும் நண்பர்களும் பயணம் தொடர்ந்தனர்.

  டும்.... டும்.... டும்..... செண்டை மேளம் கேட்டது. அனைவரும் ஆற்றின் கரைக்குச் சென்றனர். அது ஆமை அண்ணனின் பிறந்த நாள் கொண்டாட்டமாக இருந்தது.

  சீனு எறும்பும் நண்பர்களும் கொண்டாட்டத்தில் அவர்களுடன் சேர்ந்தனர். பிறந்த நாள் விருந்தையும் சாப்பிட்டனர். அனைவரும் மகிழ்ச்சியுடன் வீட்டிற்குத் திரும்பிச் சென்றனர்.

**மதிப்பீடு**

- உயிரினங்களின் பெயர் கூறுகிறார்கள்.
- சிறப்புகள் கூறுதல் (சிறகு, கால்கள் போன்றவை)
- சிறு பிராணிகளுக்கு வண்ணம் தீட்டுகிறார்கள்.

## மையக் கருத்து 20 ஆடை

நுண்ணிய - தசை வளர்ச்சிக்காக துணிகள் மடித்தல், ஆடை அணிதல் கழற்றுதல் போன்ற செயல்பாடுகளை அறிமுகப்படுத்தலாம். ஐம்புலன்களைப் பயன்படுத்தி பலவகையிலான துணிகளின் சிறப்புகளை கண்டுபிடிக்கவும் கூறவும் இயலவேண்டும். ஆடை சுத்தத்தைக் கடைபிடிப்பதன் தேவையைப் புரியச் செய்யும் செயல்பாடுகள் கொடுக்கலாம். ஆடைகளைச் சலவை செய்தல் காய வைத்தல் போன்ற செயல்பாடுகள் வாயிலாக அறிவியல் உணர்வு, சமூக உணர்வு வளர்ச்சியும் ஏற்படும்.

### செயல்பாட்டு வரிசை

1. விருப்பமான ஆடைகளைக் குறித்துக் கூறுதல்.

↓

2. பலவகை துணித் துண்டுகளை உற்றுநோக்கி சிறப்புகள் கூறுதல் (நிறம், பள பளப்பு, மணம், படம்)

↓

3. வீட்டில் அணியும் ஆடைகளைக் குறித்து கூறுதல்.

↓

4. ஆடைகளை மடித்தல்.

↓

5. ஆடைகளைக் கழற்றுதல், அணிதல், துணிகள் மடித்தல்.

↓

6. பயிற்சித்தாள் 20.1 - நண்பர்களை வரையலாமா? வழங்குதல்.

↓

7. பல வித ஆடைகள் - சுதந்திர பிரதிபலிப்பு.

↓

8. பயிற்சித்தாள் 20.2 - "யாருடைய ஆடை?" வழங்குதல்.

### பயிற்சித்தாள் - 20.1 நண்பர்களை வரையலாமா?

**வளர்ச்சி மண்டலங்கள்**
- அறிவு சார் வளர்ச்சி
- மொழி வளர்ச்சி
- உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள்**
1. கணித அடுக்குகளைக் காட்சிப் படுத்தி அவற்றை அழகாக ஒழுங்கு செய்ய இயல்கிறது (42).
2. சுதந்திரமாக படங்களுக்கு வண்ணம் தீட்ட இயல்கிறது (5).

**கருத்து**
- பலவகை ஆடைகள் உள்ளன.

**கருவிகள்**
- பயிற்சித்தாள் கிரையான்ஸ்

**சூழல்**
- துணிகள் / ஆடைகளில் உள்ள அடுக்குகள் கண்டறிதல் செயல்பாடுகளுக்குப் பின்.

**செயல்முறை**
ஆடைகளிலுள்ள பல்வேறு நிறங்களையும் படங்களையும், பூக்களையும் பார்த்தீர்கள் அல்லவா......

**பயிற்சித்தாள் 20.1** - "நண்பர்களை வரையலாமா?" வழங்குதல்.

ஒரே பாற்றேண்கள் ஆடைகளில் வரைந்து சேர்க்கலாமா?

விருப்பமான நிறம் கொடுங்கள்......

தொடர் செயல்பாடு - காய்கறி அச்சு (பிரின்டிங்)

### மதிப்பீடு

- ஒரே போலுள்ள அடுக்குகளைப் புரிந்து கொள்ளவும் வரைந்து இணைக்கவும் முடிந்துள்ளது.
- வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.

## பயிற்சித்தாள் 20.2 - யாருடைய ஆடை?

**வளர்ச்சி மண்டலங்கள்**
- அறிவு சார் வளர்ச்சி
- உடல் இயக்க வளர்ச்சி

**திறன்கள்**
1. கண்டுபிடித்தல் செயல்பாடுகளில் ஈடுபடவும் அனுபவத்தின் பின்துணையோடு முடிவுகள் வெளியிடவும் இயல்கிறது (31).
2. சுதந்திரமாக படங்களுக்கு வண்ணம் தீட்ட இயல்கிறது (5).

**கருத்து**
- பலவகை ஆடைகள் உள்ளன. பெரியோருக்கான ஆடைகள், குழந்தைகளுக்கானவை பெண்களுக்கானவை, ஆண்களுக்கானவை.

**கருவிகள்**
- பயிற்சித்தாள், கிரையான்ஸ்

**சூழல்**
- தொடர்புடைய ஆடைகளைக் கண்டுபிடித்தல் என்ற செயல்பாட்டிற்குப் பின்.

**செயல்முறை**

பல்வேறு வயதினருடைய ஆடைகளைக் காட்சிப் படுத்துதல். (பெரியவர்கள், குழந்தைகள், ஆண், பெண் போன்றன).

- உங்களது அப்பாவிற்கு எந்த ஆடை பிடிக்கும்?
- உங்களது அம்மாவுக்கு? உங்களுக்கு?
- குழந்தைகள் உற்றுநோக்கி ஆடைகளை வகைப்படுத்துகிறார்கள்.
  - பெரியவர்கள்
  - குழந்தைகள்
  - பெண்கள்
  - ஆண்கள்

**பயிற்சித்தாள் 20.2** - "யாருடைய ஆடை?" வழங்குதல்.

படத்தைப் பார்த்து பொருத்தமான ஆடைகளுடன் வரைந்து இணைத்தல்.

- நீங்கள் அணிகின்ற ஆடைகளுக்கு விருப்பமான வண்ணம் தீட்டுதல்....

## மதிப்பீடு

- பெரியவர்கள் குழந்தைகள் ஆகியோருக்குப் பொருத்தமான ஆடைகளுக்கு நேராக வரைந்து இணைக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு குழந்தையும் அணிகின்ற ஆடைகளைப் புரிந்து கொண்டு வண்ணம் தீட்டப்பட்டுள்ளது.